மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 8 • இதழ் 9 • மார்ச் 2024 • விலை ரூ.18/-

வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

எண்ணங்கள்

வாழ்க்கைக் கல்வி சிறப்பிதழ்


RAMRAJ ©
COTTON
WHITE SHIRTS
SCAN QR CODE FOR
STORE LOCATION

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

வாழ்வில் இனிமை சேர்க்கும் வழிகளைக் கற்று அதன்படி வாழ்ந்து மேன்மை பெற உதவும்

வாழ்க்கைக் கல்வி

சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மதிப்பிற்குரிய சந்தாதாரர்களே, வணக்கம்.

வெண்மை இதழ் தங்களுக்கு வந்து சேர்வதில் தாமதம் ஏற்பட்டாலோ அல்லது வரவில்லை என்றாலோ வாட்ஸ்அப் மூலம் 98422 74137 என்ற எண்ணுக்குத் தெரியப்படுத்தவும். உடனடியாக தக்க ஏற்பாடு செய்யப்படும்.

– நிர்வாகம்

மதிப்பிற்குரியவர்களுக்கு...

வணக்கம்.

'மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வியின் நோக்கம்' என்றார் சுவாமி விவேகானந்தர். கல்வி என்பது பணம் சம்பாதிப்பதற்கான ஒரு கருவி என்கிற மனநிலையில் பலரும் ஓடிக்கொண்டிருக்கும் சூழலில், விவேகானந்தரின் இந்தத் தெளிவை மனதில் பதிய வைத்துக்கொள்வது அவசியம்.

கல்வி என்பதை வெறும் பாடப்புத்தகங்களைப் படித்து மதிப்பெண் எடுப்பது எனக் குறுக்கிப் புரிந்துகொள்கிறோம். மனிதன் தனக்குள் புதைந்திருக்கும் பூரணத்தை உணர்வதற்கு அதில் வாய்ப்பில்லை. உடற்கல்வி என்பது குழந்தைகளின் அடிப்படை. ஓடியாடி விளையாடுவதன் மூலமே சிறுவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சி சிறப்புற அமைகிறது. நன்னெறிக் கல்வி என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் பெற்றோர் தருகிற உண்மையான சொத்து. போட்டியும் பொறாமையும் ஏற்றத்தாழ்வுகளும் நிரம்பிய உலகில், மனதின் சமநிலை தவறாமல் வாழ வேண்டும். சிறுவயதில் நாம் தருகிற நன்னெறிக் கல்வியே அதற்குப் பெருந்துணையாக இருக்கும். கல்வி எனும் மரத்தின் ஆணிவேர் வாழ்க்கைக் கல்வி என்பதாகும்.

குழந்தையின் இயற்கைக் குணமே கற்றல்தான். பார்த்தும், கேட்டும், தொட்டும், உணர்ந்தும் ஒவ்வொருநாளும் கற்றுக்கொண்டே இருக்கிறது குழந்தை. 'அறிதல்' என்பது கல்வி என்றால், 'தன்னை அறிதல்' வாழ்க்கைக் கல்வி என்று புரிந்துகொள்ளலாம். அறிதலின் மூலம் வருவதே அறிவு. ஒன்றை அறிந்துகொள்கிறோம் எனில் அறியாமையிலிருந்து விலகுகிறோம் என்பதே அர்த்தம். அறிவு என்பது மனிதர்களிடம் இயல்பாக அமைந்திருப்பது. அறிதல் என்பது புறத்தேயிருந்து வருவதில்லை, அது அகத்தே அமைந்திருக்கிறது. 'அறிவுக் களஞ்சியமாகிய ஆன்மாவை மூடியிருக்கும் அறியாமைத் திரையை நீக்குதலே கற்றல்' என்கிறார் விவேகானந்தர். ஆனால், பொருளற்ற கல்வி கொஞ்சம் படித்தவுடனே மனதில் ஆணவத்திரையைப் போடுகிறது.

வேடிக்கையாக ஒரு கதை உண்டு. பண்டிதர் ஒருவர் முடிவெட்டுவதற்கு ஒரு சலூனிற்குச் சென்றார். முடிவெட்டும் தொழிலாளியைவிட அறிவில் தானே சிறந்தவர் என்கிற எண்ணம் அவருக்கு இருந்தது. ஆணவமும் தற்பெருமையும் மனிதனைச் சும்மா இருக்கவிடாது. அடுத்தவர்களை மட்டமாகக் கருதி, தன்னுடைய தகுதியை வெளிப்படுத்திக்கொண்டே இருக்கும். பண்டிதர் நக்கலாக அவரிடம், "என்னப்பா, முடி வெட்ட எவ்வளவு? சவரம் பண்ண எவ்வளவு?" என்றார். தொழிலாளி, 'முடிவெட்ட 100 ரூபாய். முகச்சவரம் செய்ய 25 ரூபாய்' எனப் பொறுப்பாகப் பதில் சொன்னார். பண்டிதர் புத்திசாலிதனமாக, "அப்படின்னா தலையைச் சவரம் பண்ண எவ்வளவு" என்று கேட்டுத் தனக்குத் தானே சிரித்துக்கொண்டார். தொழிலாளி கத்திரிக்கோலை எடுத்ததும், "தினம் வெட்டி வெட்டித் தள்றதுதானே உன் வேலை? அப்ப ஊர்லயே நீதான் பெரிய வெட்டிப் பய" என்று பண்டிதர் சொல்லிச் சிரித்தார்.

இப்படி எல்லை மீறி அடுத்தடுத்து பேசி அவமானப்படுத்திய பண்டிதரைச் சமாளிப்பது எப்படி என யோசித்தார் தொழிலாளி. கண்ணிமைக்கும் நேரத்தில் கத்தியை எடுத்துப் பண்டிதரை மொட்டை அடிக்கத் தொடங்கினார். பாதியில் சுதாரித்த பண்டிதர் "நிறுத்துய்யா" என்று கத்தினார். வேலையைப் பாதியில் நிறுத்திய தொழிலாளி, "பாதி தலைதான் சவரம் பண்ணியிருக்கேன், 25 ரூபாய் குடுங்க போதும்" என்று சிரித்தபடி சொன்னார். "நீ கேட்ட நூறு ரூபாய் தர்றேன். முழுசா மொட்டை அடிச்சிடு. இப்படியே வெளிய தலைகாட்ட முடியாது" எனப் பண்டிதர்



கெஞ்சினார். "தலையை மட்டும் காட்டினா முண்டம்னு சொல்ல மாட்டாங்களா?" என்று கத்தியை எடுத்தார் தொழிலாளி. தன் தவறை உணர்ந்து தொழிலாளியிடம் மன்னிப்புக் கேட்டார் பண்டிதர். தொழிலாளியும் தான் அப்படி நடந்துகொண்டமைக்கு வருத்தம் தெரிவித்தார். நம் அறிவும், திறமையும், அதிகாரமும், அந்தஸ்தும், பொருளும் மற்றவர்களுக்கு உதவுவதற்கே பயன்பட வேண்டும் என்கிற அறிவுறுத்தலோடு அந்த வேடிக்கைக் கதை முடிவு பெறும்.

கல்வியைச் சுருக்கிப் புரிந்துகொள்வதால் குழப்பமே மிஞ்சும். அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் 'வாழ்க்கைக் கல்வியே நம் வாழ்விற்கு அவசியமானது' என்பதை வலியுறுத்தியதோடு, அதற்கு வழிகாட்டவும் செய்தார். 'மனித வாழ்விற்கு ஓர் அடிப்படை நோக்கம் உண்டு. அந்த நோக்கம் சிதையாமல் நமது சிந்தனையும், செயல்திறனும் அமைய வேண்டும்' என்றார்.

'எந்தச்செயல் செய்தாலும் அதன் விளைவு என்ன ஆகும் என்று யூகித்து உணர்ந்துகொள்ள வேண்டும். தனக்கோ, பிறருக்கோ, உடலுக்கோ ஒரு செயல் தீமை தரும் என்று உணர்ந்தால் அதைச் செய்யாது தவிர்க்க வேண்டும். அதேபோன்று, ஒரு செயலில் அளவு மீறினால், முறை மாறினால், அதற்கு ஏற்ப விளைவு மாறும். இதைக் கணித்துக்கொள்ள வேண்டும். வாழ்வில் இனிமை நிலை பெற வேண்டுமானால், எந்தச் செயலையும், விளைவறிந்து, அளவு முறையோடு ஆற்ற வேண்டும். அத்தகு பண்பே ஒழுக்கம் எனப்படும்' என்கிற மகரிஷியின் கருத்து, கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் உள்ள நெருக்கத்தை நன்கு விளக்கும்.

எழுத்தறிவு, தொழிலறிவு, இயற்கைத் தத்துவ அறிவு, ஒழுக்கப் பழக்கங்கள் என்ற நான்கு அங்கங்களும் இணைந்த கல்வியே மனிதனைச் சிறப்பாக வாழ வைக்கிற வாழ்க்கைக் கல்வி. அதுவே தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே இனிமையான உறவை நீடிக்கச் செய்யும் என்றார் அருட்தந்தை. கல்வியின் இந்த நான்கு தன்மைகளில் எது ஒன்று குறைந்தாலும் அந்தக் கல்வி மனிதனுக்குள் இருக்கும் பூரணத்துவதை உணர துணை நிற்காது.

புகழ்பெற்ற ஆன்மிக குரு ஒருவர், ஓர் அரங்கத்தில் பேசப்போவதாக அறிவிப்பு வெளியானது. அந்த நாளில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர். ஆனால் குரு அன்று வரவில்லை. அடுத்த நாள் வருவார் என அறிவிக்கப்பட்டது. அடுத்த நாள், முதல் நாளில் வந்த பாதிக்கூட்டம்தான் வந்தது. அன்றும் குரு உரை நிகழ்த்த வரவில்லை. அடுத்த நாள் வருவார் என அறிவிப்பு வெளியானது. இப்படியே ஒவ்வொரு நாளும் அறிவிப்பு மட்டும் வந்து ஒரு மாதம் ஓடியது. 30-வது நாள் 10 பேர்கூட வரவில்லை. குரு திடீரென வருகை தந்தார். கதவுகள் இழுத்துப் பூட்டப்பட்டன. குரு வந்துவிட்டார் என்ற செய்தி ஊரில் விரைந்து பரவியது. மீண்டும் ஆயிரக்கணக்கனவர்கள் கூடினர். ஆனால் கதவு அடைக்கப்பட்டு இருந்தது. தொடர்ந்து குருவைத் தேடிக்கொண்டிருந்த 10 பேருக்கு மட்டுமே அவரைச் சந்திக்கவும் உரையாடவும் வாய்ப்புத் தரப்பட்டது.

அந்த 10 பேரும், "குருவே, உங்களைக் காணவே ஆர்வமாகத் தினமும் காத்திருந்தோம்" என்று கூறினர். குரு சிரித்தபடி அவர்களிடம், "கடந்த 30 நாட்களும் நீங்கள் எனக்காகக் காத்திருக்கவில்லை. நானே உங்களுக்காகக் காத்திருந்தேன்" என்று கூறினார். தேடல் இருந்தால் மட்டுமே கற்றல் சிறப்பாக அமையும். அறிதல், தேடல் என்கிற பண்புகளின் வழியே கிடைக்கும் வாழ்க்கைக் கல்வி நமக்கும் நன்மை தரும், நாட்டிற்கும் நன்மை தரும். இம்மாத 'வெண்மை எண்ணங்கள்' சிறப்பிதழ் வாழ்க்கைக் கல்வியின் அவசியத்தை மகத்தான அறிஞர்களின் கருத்துகள் வழி வாசகர்களுக்கு உணர்த்தும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

கே.ஆர்.நாகராஜன்

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

பிறரை நினைக்கும் பாடம்!

ஒரு தொழிலதிபர் இருந்தார். எல்லோரிடமும் கனிவாகப் பேசுவார். தன் நிறுவனத்தின் கடைநிலை ஊழியருக்குக்கூடத் தேவையானதைச் செய்வார். பொதுக் காரியங்களுக்குத் தயக்கமே இல்லாமல் உதவிகள் செய்வார். எந்தச் சூழலிலும் டென்ஷன் ஆகமாட்டார். யாருடனும் போட்டி போடும் எண்ணம் அவரிடம் இல்லை. இருந்தாலும், அவர் நிறுவனம் நன்கு வளர்ந்துகொண்டிருந்தது. அவரின் நண்பர் ஒருவர் ஆச்சரியம் அடைந்து, “எப்படி உங்களுக்கு இந்தப் பக்குவம் சாத்தியமானது?” என்று கேட்டார். இளம் வயதில் தன் அப்பா கற்றுக்கொடுத்த வாழ்க்கைப் பாடத்தைப் பற்றித் தொழிலதிபர் விவரித்தார்.

‘‘நான் சிறுவனாக இருந்தபோது மிகுந்த சுயநலக்காரனாக இருந்தேன். என் பொருட்கள் எதையும் யாருடனும் பகிர்ந்துகொள்ள மாட்டேன். மற்ற குழந்தைகள் ஏதாவது நல்ல பொருளோ, விளையாட்டுப் பொம்மையோ வைத்திருந்தால், எனக்கு வேண்டும்’ என்று அடம்பிடித்து வாங்கிக்கொள்வேன். என்னுடைய இந்தக் குணத்தால், எல்லோரும் என்னைவிட்டு விலக ஆரம்பித்தார்கள். ஒருகட்டத்தில் எனக்கு நண்பர்களே இல்லாமல் போய்விட்டார்கள். நான் என் தவறை உணராமல், மற்றவர்களைக் குறை சொல்லிக்கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில் என் அப்பா எனக்கு மூன்று வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தார்.

அப்போது எங்கள் குடும்பம் சராசரி வருமானம் கொண்ட எளிமையான குடும்பம். எப்போதாவது கிடைக்கும் முட்டைதான் எங்களுக்குஸ்பெஷல் உணவு. வீட்டில் முட்டை சமைத்தால் நான் கிச்சனையே சுற்றிவருவேன். ஒருநாள் இரவு அப்பா இரண்டு பாத்திரங்களில் சாதம் வைத்து எடுத்து வந்தார். இரண்டு பாத்திரங்களையும் நடுவில் வைத்தார். ஒரு பாத்திரத்தில் சாதத்தின் மேல் ஒரு முட்டை வைக்கப்பட்டுக் குழம்பு ஊற்றியிருந்தது. இன்னொன்றில் வெறும் சாதமும் குழம்பும் மட்டும் இருந்தது. ‘உனக்கு இந்த இரண்டில் எது வேண்டுமோ, நீயே எடுத்துக்கொள்!’ என்றார். உடனே நான் முட்டை வைத்திருந்த பாத்திரத்தை எடுத்துக்கொண்டேன். அப்பாவுக்கு முட்டை இல்லையே என்று கவலைப்படவில்லை.

சிறந்த முடிவை எடுத்ததாக என்னை நானே பாராட்டிக்கொண்டேன். வேகமாக முதலில் முட்டையைச் சாப்பிட்டுவிட்டு அப்புறம் சாதம் சாப்பிட ஆரம்பித்தேன். அப்பா அவருடைய பாத்திரத்தை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தபோது எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அவருடைய பாத்திரத்தில் சாதத்துக்கு அடியில் இரண்டு முட்டைகள் இருந்தன. அதைப் பார்த்ததும் வருத்தப்பட்டேன். ‘அவசரப்பட்டுத் தவறான முடிவு எடுத்து ஒரு முட்டையை இழந்துவிட்டேனே’ என்று என்னை நானே திட்டிக்கொண்டேன். அப்பா மென்மையாகச் சிரித்தபடி, ‘உன் கண்கள் பார்ப்பது உண்மையாக இல்லாமல் போகலாம். மற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டியதை நீ அடைய நினைத்தால் இழப்பு உனக்குத்தான்’ என்ற வாழ்க்கைப் பாடத்தைச் சொன்னார்.

அடுத்த வாரமும் இதேபோல் இரண்டு பாத்திரங்களில் சாதம் கொண்டுவந்தார் அப்பா. முன்பு போலவே ஒன்றில் மேலே முட்டை இருந்தது; இன்னொன்றில் இல்லை. ‘எது வேண்டும்?’ என்று அப்பா கேட்டார். மேலே முட்டை வைக்கப்படாத பாத்திரத்தில் அடியில் இரண்டு முட்டை இருக்கும் என்று நம்பி அதையே எடுத்தேன். ஆனால், சாதத்துக்கு அடியில் கைவிட்டு எவ்வளவு துழாவிப் பார்த்தும் ஒரு முட்டைகூடக் கிடைக்கவில்லை. அன்றைக்கும் அப்பா சிரித்தபடி, ‘எப்போதும் அனுபவங்களின் அடிப்படையிலேயே ஒன்றை நம்பக்கூடாது. சில நேரங்களில் வாழ்க்கை உன்னை

ஏமாற்றக்கூடும், தந்திரத்தில் விழவைக்கும். கண்ணுக்குத் தெரியாத ஒன்றை எப்போதும் யூகத்தின் அடிப்படையில் நம்பாதே' என்று இரண்டாவது வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொடுத்தார்.

மூன்றாவது வாரமும் அதே போல் நடந்தது. ஆனால், இந்த முறை அவசரப்பட்டு நான் பாத்திரத்தை எடுக்கவில்லை. 'நீங்கள்தான் குடும்பத்துக்காக உழைக்கிறீர்கள். எனவே, முதலில் நீங்கள் உங்களுக்கான பாத்திரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இன்னொன்றை நான் எடுத்துக்கொள்கிறேன்' என்று அப்பாவிடம் சொன்னேன். முட்டை இருந்த பாத்திரத்தை அப்பா எடுத்துக்கொண்டார். நான் இன்னொன்றை எடுத்து சாப்பிட ஆரம்பித்தேன். இந்தப் பாத்திரத்தில் முட்டை இருக்காது என்றுதான் நினைத்தேன். ஆனால், சாதத்தின் அடியில் இரண்டு முட்டைகள் இருந்தன. இதை எனக்கு விட்டுக் கொடுத்த அப்பாவை ஆச்சரியத்துடன் பார்த்தேன்.

அப்பா கண்களில் அன்பு கனிய எனக்கு மூன்றாவது பாடத்தைச் சொன்னார். 'மகனே, நினைவில் வைத்துக்கொள். மற்றவர்களுக்கு நீ நல்லது நினைக்கும்போதெல்லாம், உனக்கும் நல்லதே நடக்கும்!'

அப்பா சொன்ன இந்த மூன்று வாழ்க்கைப் பாடங்களை நான் மறக்கவே இல்லை. அவற்றையே பின்பற்றுகிறேன். அதனால்தான் வெற்றி பெறுகிறேன்...'' என்றார் தொழிலதிபர்.

இதுபோல நீங்கள் எப்போதும் பின்பற்ற வேண்டிய சில வாழ்க்கைப் பாடங்கள்:

- அன்பைக் கடன் கொடுங்கள். அது அதிக வட்டியுடன் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.
- விட்டுக் கொடுங்கள்; விருப்பங்கள் நிறைவேறும். தட்டிக் கொடுங்கள்; தவறுகள் குறையும். மனம்விட்டுப் பேசுங்கள்; அன்பு பெருகும்.
- நேசிக்கும் நூறு பேரை நேசிக்கத் தொடங்கினாலே, வெறுக்கும் நான்கு பேரைப் பற்றி யோசிக்க நேரம் இருக்காது.
- வாழ்வில் இணையும் மனிதர்களும், குறுக்கிடும் சம்பவங்களும் தற்காலிகம்தான். அவற்றை நிரந்தரமாக்கிக்கொள்வது நம் கையில்தான் உள்ளது.
- எல்லோருடனும் இயல்பாகப் பழகுங்கள். சிரித்துப் பேசுங்கள். ஆனால், நம்பிக்கையான மனிதர்களிடம் மட்டும் ஆலோசனை கேளுங்கள்.
- ஆசைகள் இல்லாத வாழ்க்கையை நீங்கள் எப்போது தேடிச் செல்கிறீர்களோ, அப்போது துன்பம் இல்லாத வாழ்க்கை உங்களைத் தேடி வரும்.
- மன நிறைவு என்பது இயற்கையாக நம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் என்பது நாம் தேடிக்கொள்ளும் வறுமை.
- 'இப்படித்தான் வாழ்வேன்' என முரட்டுத்தனமாக விதிகளை வகுத்துக்கொள்ளாதீர்கள். அன்பானவர்களுக்காக விதிவிலக்குகளை எப்போதும் செய்யுங்கள்.
- வாழ்க்கை உங்களை எதிர்பாராத இடங்களுக்கு கூட்டிக்கொண்டு செல்லும். அன்புதான் உங்களை மறுபடியும் வீட்டுக்கு அழைத்து வரும்.
- சிரித்துப் பாருங்கள், உங்கள் முகம் உங்களுக்குப் பிடிக்கும். மற்றவர்களைச் சிரிக்க வைத்துப் பாருங்கள், உங்கள் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்.
- கஷ்டங்களுக்கு ஆறுதல் கூறுபவர்கள் மனிதர்கள். அவற்றுக்குத் தீர்வு வழங்குபவன் இறைவன். எப்போதும் இறைவனாக மாற முற்படுங்கள்.
- ஒருவரின் வசதிக்கு மரியாதை கொடுக்காதீர்கள். அவரின் வயதுக்கு மரியாதை கொடுங்கள். வசதி எல்லோருக்கும் வருவதில்லை. ஆனால் முதுமை எல்லோருக்கும் வரும்.
- மகிழ்ச்சியை உருவாக்காதவர்களுக்கு மகிழ்ச்சியை அனுபவிக்கும் உரிமையில்லை.
- உங்களுக்கு ஏதாவது பிடிக்கவில்லையெனில், அதனை மாற்றுங்கள். அப்படி மாற்ற இயலவில்லையெனில், உங்கள் மனோபாவத்தை மாற்றிக்கொள்ளுங்கள். ●

PRESS & REGISTRATION OF BOOKS ACT
Registration of newspapers (Central) Rules, 1957
FORM IV (SEE RULE 8) Statement about
Ownership & other particulars about Newspaper
VENMAI

1	Place of Publication	10, Sengunthapuram, Tirupur-641604.
2	Periodicity of its Publication	Monthly
3	Printer's Name	B. Ashok kumar
	Nationality	Indian
	Address	Rathna Offset Printers 40, Peters Road, Royapettah, Chennai-14.
4	Publisher's Name	K.R. Nagarajan
	Nationality	Indian
	Address	10, Sengunthapuram, Mangalam Road, Tirupur-641604.
5	Editor's Name	T.J. Gnanavel
	Nationality	Indian
	Address	A 2, Trinity Complex, 110, 4th Avenue, Ashok Nagar, Chennai 600 083
6	Name and Address of Shareholders holding more than one percent of the Share Capital	K.R. Nagarajan 10, Sengunthapuram, Mangalam Road, Tirupur-641604.

I, K.R. Nagarajan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 01-03-2024 Signature of Publisher: K.R. Nagarajan

மனதால் உணர்ந்து செய்!

தனிமையான ஓரிடத்தில் ஆசிரமம் வைத்திருந்த ஒரு துறவியிடம் அடைக்கலம் தேடி வந்தான் ஒருவன். சீடர்கள் எல்லோரும் அவனைச் சந்தேகத்துடன் பார்த்தாலும், “வந்து தங்கிக் கொள்” என்று அவனுக்கு இடம் கொடுத்தார் துறவி.

ஒரே நாளில் அவன் தாக்குப்பிடிக்க முடியாமல் துறவியிடம் வந்து வணங்கினான். “ஐயா, நான் ஒரு திருடன். காவலர்கள் பிடித்துவிடுவார்கள் என்ற பயத்தில்தான் இங்கு வந்து தங்கினேன். உங்களின் ஆன்மிக வாழ்க்கைமுறை எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால், நான் திருடன் என்பது உங்கள் சீடர்களுக்குத் தெரிந்துவிட்டது. நீங்களாக அனுப்புவதற்கு முன்பு நான் போய்விடுகிறேன்” என்றான்.

“உன்னை யார் போகச் சொன்னது, நீ இங்கேயே இருக்கலாம்” என்றார் துறவி. “நான் ஒருவேளை இங்கு எதையாவது திருடிவிட்டால் என்ன செய்வது?” என்று கேட்டான் திருடன். “உன்னைத் திருட வேண்டாம் என்று சொல்ல மாட்டேன். ஆனால், நீ எதைச் செய்தாலும் மனதால் உணர்ந்து செய். ‘நான் குளிக்கிறேன்’, ‘நான் சாப்பிடுகிறேன்’ என்று ஒவ்வொன்றையும் மனப்பூர்வமாகச் செய். திருடும்போது அப்படியே செய்” என்று சொல்லி அவனை அனுப்பினார் துறவி.

இரண்டு நாட்கள் கழித்து அவன் வந்தான். “ஐயா, என்னால் மனப்பூர்வமாக மற்ற எல்லாச் செயல்களையும் செய்ய முடிகிறது. ஆனால், திருட முடியவில்லை. ‘இது தவறு’ என்று மனம் தடுக்கிறது. இனி நான் திருடன் இல்லை, உங்கள் சீடன்” என்று பணிந்து நின்றான்.

எந்தச் செயலையும் மனப்பூர்வமாகவும் கவனத்துடனும் செய்யும்போது, நீங்கள் தவறு செய்யவே மாட்டீர்கள்.

குழப்பம் கூடாது!

ஹோட்டலுக்குப் போகும் பலர், கையில் தரப்பட்ட மெனு கார்டை முழுக்கப் பார்த்துவிட்டு, எதைத் தேர்வு செய்வது என்று தெரியாமல் விழிப்பார்கள். அப்புறம், “சாப்பிட என்ன இருக்கு” என சர்வரிடம் கேட்பார்கள். நிறைய வாய்ப்புகள் வரும்போது, எதைத் தேர்வு செய்வது என்று குழப்பம் வருவது இயல்பு. வாழ்க்கையானது அத்தனை வாய்ப்புகளையும் நம் கையில் தருகிறது. என்றாலும், எவரையோ, எதையோ எதிர்பார்த்து ஏங்கி நிற்பது வேண்டாம். எது நமக்கு நன்மை தரும் என்பதை உணரும் தெளிவு வேண்டும்.

அனுபவத் தீர்ப்பு!

கிராமத் தலைவர் ஒருவரிடம் இரண்டு பேர் ஒரு வழக்குடன் வந்தார்கள். “நாங்கள் இருவரும் அடுத்தடுத்த வீடுகளில் வசிக்கிறோம். என் தோட்டத்தில் இருக்கும் பசு நேற்றிரவு ஒரு கன்றுக்குட்டியைப் பிரசவித்தது. அதேபோல இவன் தோட்டத்திலும் ஒரு பசுவுக்குக் கன்று பிறந்தது. அவனுடைய கன்றுக்குட்டி இறந்துவிட்டது. அதை மறைத்துவிட்டு என்னுடைய கன்றுக்குட்டிக்கு அவன் சொந்தம் கொண்டாடுகிறான்” என்றான் ஒருவன். இன்னொருவனும் அதையே சொன்னான். ‘‘நீங்களே இதில் தீர்ப்பு சொல்லுங்கள்’’ என்று இருவரும் வற்புறுத்தினார்கள்.

ஒற்றுமையே வலிமை!

குரைக்கும் நாயை ஒரு கல்லை எடுத்து அடித்தால், நாய் பயந்து ஓடிவிடும். அதே கல்லை ஒரு தேன்கூட்டில் உள்ள தேனீக்களின் மீது அடித்தால், அவை அடிப்பவரை ஒரு கை பார்த்துவிடும். தலைதெறிக்க ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. யோசித்துப் பாருங்கள்... தேனீக்களைவிட நாய் வலிமையானது. ஆனால், நாய் ஏன் பயந்து ஓடியது? தேனீக்கள் ஏன், அடித்தவரை ஓட வைத்தது?

காரணம்... நாய் தனியாக இருக்கிறது. தேனீக்கள் கூட்டமாக இருக்கின்றன. நாம் எவ்வளவுதான் சக்திவாய்ந்த மனிதராக இருந்தாலும், தனியாக இருக்கும்போது வலிமை குறைவு. ஒற்றுமையாக இருந்தால் நம் பலமே தனி. குடும்பத்திலும் சமூகத்திலும் ஒற்றுமையை வளர்ப்போம்.

தலைவர் யோசித்தார். இருவரின் பசுமாடுகளையும் தனித்தனியே மரங்களில் கட்டச் சொன்னார். பிறகு கன்றுக்குட்டியை அவிழ்த்து விடச் சொன்னார். கன்று தன் தாயைத் தேடிப் போகும் என்று நம்பினார். ஆனால், கன்றுக்குட்டி இரண்டு பசுக்களிடமும் போகாமல் விளையாட்டுத்தனமாக வேறு எங்கோ ஓடியது. தலைவர் குழம்பினார்.

வீட்டுக்குள்ளிருந்து அதைப்பார்த்துக்கொண்டிருந்த அவர் மருமகள் வேறொரு யோசனை சொன்னாள். அவள் கன்றுக்குட்டியை மரத்தில் கட்டச் சொல்லி, இரண்டு பசுக்களையும் அவிழ்த்துவிடச் சொன்னாள். தாய்ப்பசு ஓடிவந்து கன்றுக்குட்டியை வாஞ்சையுடன் உரசிவிட்டு தன் மடியைக் காட்டியது. ஒரு தாயின் கோணத்தில் தீர்வு தேடக் கற்றுக்கொண்டார் தலைவர்.

உயரம் போகலாம்!

''நீங்கள் எப்படி உயர்ந்தீர்கள்?'' என்று கேட்கப்பட்டபோது ஒரு தொழிலதிபர் பதில் சொன்னார். “என் அப்பா அதிகம் படிக்காதவர்தான். பெரிதாகத் தொழில் செய்து ஜெயித்தவரும் கிடையாது. ஆனால், அவர் கற்றுக்கொடுத்த ஒரு வாழ்க்கைப்பாடம்தான் என்னை உயர்த்தியது. சிறுவனாக இருந்தபோது என்னை ஒரு பந்தைத் தூக்கிப் போட்டு விளையாடச் சொல்வார். முதலில் பக்கத்தில் ஒரு இடத்தைக் காட்டி, அந்தத் தூரத்தில் மட்டும் தூக்கிப் போடச் சொல்வார். சில நாள் போட்டுப் பழகிய பிறகு, தூரமாக ஒரு இடத்தைக் காட்டி அங்கே போடச் சொல்வார். ‘அவ்வளவு தூரம் போட என்னால் முடியாதே’ என்று நான் சொன்னால், ‘அவ்வளவு தூரம் போடணும்னு மனசுக்குள்ள தீர்மானிச்சுக்கிட்டு முயற்சி செய்து பார்’ என்று சொல்வார். முதல் தடவை என்னால் பந்தை அவ்வளவு தூரம்போட முடியாது. ‘பரவாயில்லை. முன்பு போட்ட தூரத்தைவிட அதிகமா போட்டிருக்கே. முயற்சி செய்துக்கிட்டே இருந்தால் உன்னால முடியும்’ என்று சொல்வார். அவர் சொன்னபடியே முயற்சி செய்த சில நாட்களில் என்னால் அந்த தூரத்துக்குப் பந்தைப் போட முடிந்தது. அது மட்டும் இல்லை. அதன்பிறகு முயற்சி செய்து இன்னும் அதிக தூரமும் போட முடிந்தது.

நம் மனம் விரிந்தால், முயற்சிகள் சிறப்பாக இருந்தால் நம்மால் வெற்றிபெற முடியும் என்பதை அப்பா எளிமையாகச் சொல்லிக் கொடுத்தார். உயர்ந்த லட்சியங்களை உருவாக்கிக்கொண்டு விடாமுயற்சியுடன் செயல்பட்டதால்தான் என்னால் வாழ்க்கையில் வெற்றி பெற முடிந்தது. நம் லட்சியங்கள், உறுதி, உழைப்பு ஆகியவற்றின் அளவுக்கு ஏற்றபடிதான் நம் உயர்வு இருக்கும். உயர்ந்த இலக்குகள் இருந்தால், நாம் உயரம் போகலாம்.”

அனுசரித்துப் போகும் வாழ்க்கை!

தாவிக் குதித்தபடி வந்த ஒரு தவளை, சற்றே வேகமாக எம்பிக் குதித்து ஒரு தண்ணீர்ப் பாத்திரத்தில் விழுந்தது. எப்போதும் அழுக்குத் தண்ணீரில் இருக்கும் தவளை, சுத்தமான இந்தத் தண்ணீரில் இருப்பதைப் பெரும் சுகமாகக் கருதியது. தான் இருக்கும் தண்ணீர்ப் பாத்திரம் ஒரு பெரிய அண்டா என்பதையோ, அது அடுப்பில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதையோ அது கவனிக்கவில்லை.

தண்ணீர் லேசாகச் சூடேற ஆரம்பித்தது. குளிர்ச்சியான சகதியிலேயே இதுவரை இருந்து பழகிய அதற்கு இந்த வெப்பம் இன்னும் இதமாக இருந்தது. அசையாமல் தண்ணீரில் கிடந்தது. சூடு அதிகமானபோது, 'கொஞ்சம் அனுசரித்துக் கொள்ளலாம்' என அதற்கும் தயாரானது. சில நிமிடங்களில் தாங்க முடியாத அளவுக்குத் தண்ணீர் சூடானது. 'இனிமேலும் இதை அனுசரித்துக்கொள்ள முடியாது' என்று அது முடிவு செய்தபோது, தண்ணீர் கொதிக்கத் தொடங்கியிருந்தது. தவளை குதிக்கும் திறனை இழந்து, பரிதாபமாகச் செத்துப் போனது.

அந்தத் தவளையைக் கொன்றது எது? 'கொதிக்கும் தண்ணீர்' என்று பலரும் சொல்வார்கள். அது உண்மை இல்லை. 'அனுசரித்தது போதும்' என்று தீர்மானிக்காமல் போனதும், எப்போது எகிறிக் குதிக்க வேண்டும் என்று முடிவெடுக்காமல் போனதுமான தவளையின் இயலாமைதான் அதைக் கொன்றது.

ஷேர் ஆட்டோவில், ''கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க'' என்று சொல்லிச் சொல்லி நெருக்கியடித்துப் பயணிகளை ஏற்றுவார்கள். மூன்று பேர் அமரும் இருக்கையில் அதிகபட்சம் ஐந்து பேர் சிரமத்துடன் உட்கார முடியும். அதற்கு மேல் நெருக்கினால் எதிர்ப்பு தெரிவிப்போம் இல்லையா? மனிதர்களுடன் பழகும்போதும், சில சூழல்களை எதிர்கொள்ளும்போதும், இதேபோன்ற தெளிவு வேண்டும்.

'யாருடனும் அனுசரித்துப் போகமாட்டேன்' என்று இருந்தால், உறவுகளாலும் நட்புகளாலும் ஒதுக்கப்பட்டுத் தனித்தீவு போல ஆகிவிடுவீர்கள். எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுத்தால், உங்களை நிமிரவே விடாதபடிச் செய்துவிடுவார்கள். இரண்டிலும் தெளிவு வேண்டும்.

உதாரணமாக வெளிநாட்டுக்கு ஒருவர் படிக்கப் போகிறார், அல்லது வட இந்தியாவில் ஏதோ ஒரு நகரத்தில் வேலைக்குப் போகிறார். நாம் விரும்பும் நம் ஊர் உணவு அங்கு கிடைக்காது, நம் மொழி பேசும் சுற்றத்தார் இருக்கமாட்டார்கள். சூழலில் தெரியும் அந்நிய உணர்வு நமக்குக் கவலையும் மன உளைச்சலும் கொடுக்கும். அதுபோன்ற சூழலில் நமக்குத் தெளிவு வேண்டும். இந்த மாற்றம் நாம் விரும்பி ஏற்றுக்கொண்டது என்பதை மனதால் உணர வேண்டும். இதனால் கிடைக்கும் நன்மைகளை யோசிக்க வேண்டும். மாற்றத்தை ஏற்றுக்கொள்ள மனதளவில் தயாராக வேண்டும். மனதில் இருக்கும் அச்சமும் குழப்பமும் விலகினால்தான் நம்மால் அமைதியாக அந்த மாற்றத்தை ஏற்க முடியும். 'இப்படி எந்த மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எனக்கு உண்டு' என்று உங்களை நீங்களே தட்டிக் கொடுத்துக்கொள்ள வேண்டும்.

அதே சமயத்தில் நம் ஊரில் இருந்துகொண்டு பிடிக்காத இத்தாலிய உணவைச் சாப்பிடுமாறு யாராவது வற்புறுத்தினால், அதிலிருந்து விலகி வந்துவிட வேண்டும். எந்தச் சூழலிலும் உங்களுக்குத் தெரிந்த எல்லை வரை அனுசரித்துச் செல்லுங்கள். முடியாத சூழலில், சக்தி இருக்கும்போதே குதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். ●

அறியாமை இல்லாத வாழ்க்கை !

ஒரு கல்லூரியில் ஏரோநாட்டிகல் எஞ்சினியரிங் பாடத்தைக் கற்றுத் தரும் பேராசிரியர்கள் பலரும், புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு விமானத்தைப் பார்வையிட அழைக்கப்பட்டார்கள். விமானத்தின் வடிவமைப்பைப் பார்த்து அசந்துபோன அவர்கள், உள்ளே சென்றும் பார்வையிட்டனர். "விமானத்தை டேக் ஆஃப் செய்து ஒரு ரவுண்டு போய் வரலாமா?" என்று விமான நிறுவன நிர்வாகிகள் கேட்டதும், அனைவரும் ஆர்வமாக இருக்கைகளில் அமர்ந்து சீட் பெல்ட் போட்டுக்கொண்டார்கள்.

அப்போது விமானி ஓர் அறிவிப்பு கொடுத்தார். "இந்த விமானத்தை உருவாக்கியது உங்களிடம் கடந்த ஆண்டு படித்து முடித்த மாணவர்கள்தான். அவர்கள்மீது நம்பிக்கை வைத்து விமானத்தில் பயணம் செய்வதற்கு நன்றி" என்று அவர் குரல் ஒலித்ததும் பேராசிரியர்கள் பலரும் கலவரமானார்கள். சீட் பெல்ட்டைக் கழற்றிவிட்டு விமானத்திலிருந்து இறங்குவதற்காக ஓடினார்கள்.

ஆனால், சந்தீப், மனோகர் என்ற இரண்டு பேர் மட்டும் அசையாமல் உட்கார்ந்திருந்தார்கள். வெளியே ஓட முயன்ற பேராசிரியர் ஒருவர் சந்தீப்பைப் பார்த்து, "நீங்க இறங்கலையா?" என்று கேட்டபோது சந்தீப், "அவங்க நம் மாணவர்கள்தானே... அவங்களைப் பற்றி எனக்குத் தெரியும், இந்த விமானம் கிளம்பவே கிளம்பாது. அப்புறம் ஏன் நான் பயப்படணும்?" என்று சத்தமாகச் சொன்னார்.

மனோகரிடமும் இதே கேள்வி கேட்கப்பட்டது. அவர் சிரித்தபடி, "இந்த விமானத்தைச் செய்தவர்கள் என் மாணவர்கள். இது நன்றாக இயங்கும் என்று எனக்குத் தெரியும். பிறகு ஏன் பயப்பட வேண்டும்?" என்றார்.

அறியாமையை அகற்றும் கருவியே கல்வி. அந்தக் கல்வி பாடநூல்களில் மட்டுமே கிடைப்பதில்லை. வாழ்விலும் கிடைக்கிறது. பல சாம்ராஜ்ஜியங்கள் வீழ்ந்து புது சாம்ராஜ்ஜியங்கள் உருவானது கல்வியால்தான். தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் கல்வியால்தான் சாத்தியமாகின்றன.

கற்கால மனிதர்களின் நாகரிக வளர்ச்சியே வீடுகளும் அரண்மனைகளும் கட்டி நகரங்களை உருவாக்கி வாழ வைத்தது. விவசாயம் செய்ய வைத்தது. கலப்பை என்ற கருவியை உருவாக்கிய விஞ்ஞானியின் பெயர் நமக்குத் தெரியாது. ஆனால், அதுதான் மனிதர்களின் பசி தீர்த்து வாழவைத்தது. சக்கரத்தை உருவாக்கியவர் பெயர் நமக்குத் தெரியாது. ஆனால், அதுதான் பயணங்களையும் குடியேற்றங்களையும் சாத்தியமாக்கியது.

முதன்முதலாக வெண்கலம் என்ற உலோகம் உருவாக்கப்பட்டபோது, அதைவைத்து ஆயுதங்கள் செய்தது எகிப்து பேரரசு. அதனால் எகிப்தின் பாரோ மன்னர்கள் வெல்ல முடியாதவர்கள் ஆனார்கள். உலகின் வலிமையான பேரரசாக அது இருந்தது. அடுத்து இரும்பு கண்டுபிடிக்கப்பட்டபோது, எடை குறைவான ஆயுதங்களை எளிதில் உருவாக்க முடிந்தது. எகிப்து வீழ்ந்து ரோமப் பேரரசு வலிமையானது. துப்பாக்கியும் பீரங்கிகளும் வந்தபோது மற்ற ஆயுதங்கள் பயனற்றுப் போயின. பிரிட்டன், ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகள் வல்லரசுகள் ஆகி உலகையே அடிமையாக்கின.

இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்கள் பலருக்கும் புரியாத சூத்திரங்களைக் கொண்டவையாக இருக்கலாம். ஆனால், வெண்கலம், இரும்பு, துப்பாக்கி என்று உலகை வெல்லும் எல்லாவற்றையும் கொடுத்தவை அந்தப் பாடங்கள்தான். கல்வியாக நம்மை வந்தடையும் எதையும் வாழ்க்கையில் எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியம். வாழ்க்கைக் கல்வியே மாற்றங்களை நிகழ்த்தும்.

குழந்தைகளுக்குக் கொடுங்கள் வாழ்க்கைப் பாடம்!

ஒரு ஷாப்பிங் மாலில் துறுதுறுவென இருந்த ஐந்து வயது சிறுமி எல்லோருக்கும் ஆச்சர்யமாகத் தெரிந்தாள். அதைவிடப் பலரும் ஆச்சரியமாகப் பார்த்தது அவள் பெற்றோரை! முதலில் அவள் ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அதன்பின் அங்கிருந்த குட்டி காரில் ஏறி சில ரவுண்டுகள் பயணம் செய்தாள். அரை மணி நேரம் கழித்து ஷாப்பிங் மாலின் இன்னொரு மாடியில் ஒரு கடையில் அவள் இருந்தாள். கைகொள்ளாத அளவுக்கு பொம்மைகளை அவள் வாங்கியிருந்தாள். அதன்பின்னும் அங்கிருந்த வேறு பொம்மைகளில்தான் அவள் கவனம் இருந்தது. "போதும் செல்லம், போகலாம்" என்று கொஞ்சிய அம்மாவை, "இரும்மா, நான் இன்னும் டாய்ஸ் பார்க்கணும்" என்று அதட்டினாள்.

கொஞ்ச நேரத்தில் அவர்கள் அங்கிருந்த ஃபுட் கோர்ட்டில் இருந்தார்கள். அவர்கள் டேபிள் அருகே நிறைய பைகள் இருந்தன. எல்லாப் பைகளிலும் பொம்மைகள் நிறைந்து வெளியிலும் நீட்டிக் கொண்டிருந்தன. பெயர் தெரியாத ஏதோ ஒரு வெளிநாட்டுத் துரித உணவை அந்த ஐந்து வயது சிறுமி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அதன்பின்னும் அவள் இன்னொரு ஐஸ்க்ரீம் கேட்க, "என் கண்ணு இல்ல, என் செல்லம் இல்ல, உடம்புக்கு ஆகாதும்மா" என்று கெஞ்சி கொஞ்சிப் பார்த்தார் அவள் அம்மா. ஆனால், குழந்தையின் முகம் மாறுவதைப் பார்த்து ஐஸ்க்ரீம் ஆர்டர் செய்தார்.

அந்தச் சிறுமிதான் என்றில்லை, பலருடைய வீடுகளிலும் நடப்பதுதான் இது. குழந்தைகள் தங்களுக்கு ஏதாவது தேவை என்றால், அம்மாவை நச்சரித்து காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார்கள். இந்த ‘அடம் பிடித்தல்’ அப்பாவிடம் எடுபடுவதில்லை என்பதாலோ, அம்மாக்களையே குறிவைத்து நடக்கின்றன. “என் குழந்தை ரொம்பச் சமர்த்து. அடம்பிடிச்சாவது அவனுக்குத் தேவையானதைச் சாதித்துக்கொள்வான்” என்று இதை ஒரு பெருமைக்குரிய தகுதியாகப் பல பெற்றோர்கள் புகழ்வதும் உண்டு.

குழந்தைகளின் ஆசையைக் கெடுப்பானேன் என்ற எண்ணத்திலும், நாம் குழந்தைகளாக இருந்தபோது நமக்குக் கிடைக்காத எல்லாவற்றையும் நம் குழந்தைகளாவது அனுபவிக்கட்டுமே என்ற ஆதங்கத்தாலும், பல பெற்றோர்கள் ரொம்பவுமே வளைந்து கொடுக்கிறார்கள்.

குழந்தையாக இருக்கும்போது மட்டுமில்லை, வளர்ந்தபிறகும் இது தொடர்கிறது. அப்பாவுக்குத் தெரிந்தால் மறுப்பாரோ என்ற பயத்தில், அம்மாக்களே ரகசியமாகத் தங்கள் பிள்ளைகளின் தேவைகளுக்கு ஓகே சொல்கிறார்கள். சின்ன வயசில் ஒரு பொம்மை பைக்கில் ஆரம்பிக்கும் இந்தத் தேவைகள், கல்லூரி செல்லும் வயதில் காஸ்ட்லியான ரேஸ் பைக்கில் வந்து நிற்கிறது. நண்பர்களுக்கு பார்ட்டி கொடுக்க ஆசைப்படும் பையனுக்கு ரகசியமாக பாக்கெட் மணி கொடுக்கும் அம்மாக்கள் இங்கே நிறைய பேர். அம்மாவுக்குத் தெரியாமல் அப்பாவிடம் தனியாகப் பணம் வாங்கும் பிள்ளைகளும் இங்கு இருக்கிறார்கள்.

இதன் விளைவுகளை எத்தனை பெற்றோர்கள் நினைத்துப் பார்த்திருப்பார்கள்? ‘போதும்’ என்ற மனம் இல்லாமலும், ‘இது தேவை, இது தேவையில்லை’ என்று பகுத்தறிந்து வாங்கும் பழக்கம் இல்லாமலும் பிள்ளைகள் வளர்வது ஆபத்து இல்லையா? சக்திக்கு மீறிச் செலவு செய்தால் சந்திக்குத்தான் வர வேண்டும் என்ற உண்மை புரியாமல் வளர்கிற குழந்தைகள் ‘பிடிவாதத்தில் முந்தி பொறுப்புணர்வில் பிந்தி’ என்பதாகத்தானே ஆவார்கள்!

குழந்தைகள் கேட்டதற்கெல்லாம் பெற்றோர் வளைந்து கொடுத்துவிட்டால், அவர்களைக் கெடுக்கும் வேலையை மட்டும் நாம் செய்தவர்கள் ஆவதில்லை. ‘என்ன சொன்னால் அப்பா, அம்மாவை வழிக்குக் கொண்டு வர முடியும்’ என்று நம்மை ஏய்க்கும் திறனையும் அவர்கள் வளர்த்துக்கொள்ள உதவியவர்கள் ஆவோம். அப்புறம் ‘சரியான அசடுகள்’ என்ற பெயர்தான் பெற்றோருக்கு மிஞ்சும்.

கண்டிப்பும், ‘இது அவசியமில்லாத பொருள், வாங்கித்தர மாட்டேன்’ என்று மறுக்கும் மனமும் இன்றைய சூழ்நிலையில் மிக மிகத் தேவை. ‘நாம் கேட்டுத்தான் பார்ப்போமே’ என்ற எண்ணம் குழந்தைகளுக்கு இருக்கத்தான் செய்யும். கெஞ்சல், கொஞ்சல்களையெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டுக் கறாராக இருக்க வேண்டிய சூழல்கள் நிறைய!

ஒரு பொருளை வாங்குவதும், வாங்கி அனுபவிப்பதும்தான் சந்தோஷம் என்ற எண்ணத்தை அவர்கள் மனதிலிருந்து அகற்ற வேண்டும். பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இந்தக் கட்டுப்பாடு இருந்தால்தான் மேலும் மேலும் வாங்க வேண்டும் என்ற ஆசை தொலையும்.

திரும்பத் திரும்பத் தொலைக்காட்சிகளில் வரும் விளம்பரங்கள், கவர்ச்சிகரமான தள்ளுபடிகள், செல்போனில் விரல்நுனியில் இருக்கும் செயலிகளை வைத்து எதையும் வாங்கிவிட முடிகிற வசதி, இவையெல்லாம்தான் பலரையும் சலனப்படுத்துகின்றன. ‘எது அத்தியாவசியம், எது ஆடம்பரம்’ என்று பிரித்துப் பார்க்கிற பக்குவத்தைப் பெற்றோர்களே பிள்ளைகளுக்குக் கற்றுத் தர வேண்டும்.

ஒவ்வொரு முறை கடைத் தெருவுக்குப் போகும்போதும் குழந்தைக்குப் பிடிக்குமே என்று எதையாவது வாங்கி வந்துவிடாதீர்கள். வாங்கிக் கொடுத்துப் பழக்கிவிட்டீர்கள் என்றால், பின்னால் ‘முடியாது’ என்று மறுக்க இயலாமல் போய்விடும். அல்லது நீங்கள் சொல்லும் ‘முடியாது’க்கு மதிப்பிருக்காது.

பணத்தின் அருமையைச் சொல்லிக்கொடுத்து வளருங்கள். “நம்மால் இந்தப் பொருளை வாங்க முடியாது. அதற்கு நமக்கு வசதியில்லை” என்று சொல்வது சரியல்ல. ‘பணம் இருந்தால் வாங்கிவிடலாம் அல்லவா’ என்றே நினைப்பார்கள். அதற்குப் பதிலாக, பணத்தைச் சம்பாதிப்பதில் இருக்கும் சிரமங்களை உணர்த்துங்கள். ‘இவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தில் வாங்கக்கூடிய அளவுக்கு அந்தப் பொருள் தகுதியானதா?’ என்று யோசிக்க வையுங்கள். அவர்களின் அடம் குறையும்.

‘முடியாது’ என்று நீங்கள் ஒருமுறை மறுத்துவிட்டீர்கள் என்றால், கடைசி வரை அதில் உறுதியாக இருங்கள். குழந்தைகள் அடம்பிடிப்பதைப் பார்த்து முடிவை மாற்றிக்கொண்டீர்கள் என்றால், குழந்தையைச் சொல்லிக் குற்றமில்லை. உங்களைத்தான் சொல்ல வேண்டும்.

அதுபோல ‘முடியாது’ என்று மறுக்கும்போது அதற்கான காரணம் ஒரேயடியாக முடியாது என்றுதான் இருக்க வேண்டும். “உனக்கு இது நல்லதல்ல, தேவையும் இல்லை. அதனால் இது கிடையாது” என்று சொல்வதே நல்லது. வேறு எந்தக் காரணத்தை நீங்கள் சொன்னாலும் அதற்கு ஒரு சமாதானத்தை அவர்கள் தயாராக வைத்திருப்பார்கள்.

பெற்றோர் அட்சயப் பாத்திரமாக இருக்கலாம். அது அன்பு காட்டுவதிலும், பாசம் பொழிவதிலும் மட்டும்தான்! மற்ற விஷயங்களில் அடக்கும் பாத்திரங்களாக மாற வேண்டும். இல்லையென்றால், நீங்களும் சிரமப்படுவீர்கள், எதிர்காலத்தில் குழந்தைகளும் கஷ்டப்படும்.



வாழ்வை இனிமையாக்கும் பாடங்கள்!

- ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த விளைவிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஒவ்வொருவரும் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, உடலுக்கோ, உயிருக்கோ தீங்கு நேரா வண்ணம் நடந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அமைதியும் இன்பமும் ஏற்படும்.
- பிறருக்கு எவ்வகையிலும் தீமை ஏற்படாதபடி எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒழுங்குபடுத்திக்கொண்டு வாழ்வதுதான் ஒழுக்கமான வாழ்வு ஆகும். மற்ற எல்லாம் துன்பத்தையேதான் கொடுக்கும்.
- எவர் ஒருவர் மனதை இதமாக வைத்துக்கொள்கிறாரோ, அவர்தான் மனிதர். மனம், மொழி, செயல் இந்த மூன்றிலும் இனிமை தோன்ற வாழ வேண்டும். மனதைத் தெளிந்து, மனம் நிலைத்து மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் மன இதமாய்த் தொண்டாற்றுகிற பெருமக்களே நிறை மனிதர்கள்.
- கோபம், வஞ்சம், பொறாமை, வெறுப்புணர்வு, பேராசை, ஒழுக்கம் மீறிய காம நோக்கம், தற்பெருமை, அவமதிப்பு, அவசியமற்ற பயம், அதிகார போதை ஆகிய பத்து எண்ணங்களையும் மனதில் நிலைபெற விடக் கூடாது. இவை வளர்ந்தால், துன்பம் தரும் காடாக மனம் மாறிவிடும்.
- குறை கூறுதல், கட்டளையிடுதல், வற்புறுத்துதல் என்ற மூன்றையும் ஒழித்துவிட்டோம் என்றால் நாம் எல்லோருக்கும் நல்லவர்களாக மாறிவிடுகிறோம். உலகமே நமக்கு நட்பாக மாறிவிடும்.
- எண்ணம், சொல், செயலால் எவருக்கும் எப்போதும் நன்மையே விளைவிக்க நாட்டமாக இருங்கள்.
- அகங்காரம், கோபம், சுயநலம், தர்மம் செய்யாமல் இருப்பது, துரோகம் செய்வது போன்றவற்றை ஒதுக்கினால் நம் ஆயுள் அதிகரிக்கும்.
- மனித மனதில் தேவை, விருப்பம் என இரண்டு எண்ண எழுச்சிகள் உள்ளன. தேவை என்பது இயற்கையானது; உடலையும் உயிர் வளர்ச்சியையும் ஒட்டி எழுவது. விருப்பம் என்பது தேவையிலிருந்தும் எழலாம்; கற்பனையாகப் பழக்கத்திலிருந்தும் எழலாம். தேவையை ஒட்டி விருப்பத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டால் நீயே ஞானி!
- கோபம், கவலை, பேராசை... இம்மூன்றும் வாழ்க்கைக்கு நன்மை தரும் வழிகளை அடைத்துவிடுகின்றன.
- அமைதியைப் பெற பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல் இம்மூன்றும் எல்லையின்றித் தேவையாகும்.
- விடவேண்டியவற்றை விட்டுவிட்டால், பெறவேண்டியவை அனைத்தும் அங்கேயே இருப்பது தெரியவரும்.
- மனித மனம் ஒரு வியப்பு. ஒரு பொருளை விரும்பினால், அதை அடையும் வரை அது பற்றிப் பல மேன்மைகளையும் நன்மைகளையும்

மார்ச் 28
வேதாத்திரிய வேள்வி தினம்

• அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

கற்பித்துக் கொண்டு இன்புறும்; அதை அடைந்த பிறகு அதில் குறைகளைக் கற்பித்துக்கொண்டு சோர்வடையும். இந்தக் குறைக்கு நீங்கள் ஆளாக வேண்டாம். நல்லதையும் உயர்வையும் பாராட்டுங்கள். வாழ்வு வளம் பெறும்!

- தினந்தோறும் காலையிலிருந்து மாலை வரை பல பொருட்களைக் கையாள்கிறோம். உதாரணமாகச் சமையல் பாத்திரங்களையே எடுத்துக்கொள்ளுங்கள். சுத்தப்படுத்தி வைத்தால்தானே அவை மறுநாளைக்கு உதவும்? அதேபோலத் தினந்தோறும் மனதையும் உடலையும் உபயோகிக்கிறோம். அவற்றில் அவ்வப்போது ஏற்படும் களங்கங்களைப் போக்கி, மீண்டும் புதிதாக நாளைய உபயோகத்துக்குத் தயாராக வைத்துக்கொண்டால்தானே நன்றாக இருக்கும்!
- 10 ரூபாய் நோட்டு, 100 ரூபாய் நோட்டு, இரண்டுமே காகிதம்தான். ஆனால், மதிப்பு மாறும். அதேபோல ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு மதிப்பு உண்டு. தேவையைப் பொறுத்தே அந்த மதிப்பு அமையும். அது எத்தனையோ மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்டது என்கிறபோது அதற்கு மேலும் மதிப்பு உயருகிறது. பொருளினால் மதிப்பே தவிர, அது என்னுடையது என்பதால் மதிப்பு உயர்வதில்லை.
- ஏழ்மை மூன்று வழிகளில் உண்டாகலாம். வாழ்வில் உள்ள வசதிகளை வீணான வழிகளில் செலவு செய்து அழித்துவிடுவது, எதையும் முறையாகச் செய்யாத சோம்பேறித்தனம், உழைக்காமலே அநீதியான வழிகளில் பிறர் பொருளைப் பறிப்பது. இந்த மூன்றையும் தவிர்த்தால், எந்தக் குறையுமின்றி, எல்லோரும் பொருள்வளம் பெற்று மகிழ்ச்சியாக வாழலாம்.
- கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்வதே திருமண பந்தம். அங்கே விட்டுக் கொடுப்பதற்குப் பதிலாக, ஒவ்வொருவரும் ஒருவிதமான பிடியைப் பிடித்துக்கொண்டு, 'என் கருத்துதான் உயர்ந்தது' என்று வீம்பு காட்டினால், வீண் சண்டைதான் வரும்.
- தம்பதியருக்குள் உரசல் இல்லாத குடும்பத்தில்தான் குழந்தைகள் நன்றாக இருக்கும். இதற்கு மாறாக அங்கே அடிக்கடி மோதல்கள் நிகழ்ந்தால், அது குழந்தைகளைப் பாதிக்கும். குழந்தைகளின் மனமும் உடலும் கெடும். இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- குழந்தையை வளர்க்கும் முறையில் மிகவும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அந்தக் குழந்தை எந்த எந்தச் செயலில் ஈடுபடக் கூடாது என்று நினைக்கிறோமோ, அந்தச் செயல்களைப் பெற்றோர்கள் குழந்தைகளின் எதிரில் செய்யவே கூடாது.
- மக்களுக்குச் சொத்து சேர்த்து வைக்க வேண்டும் என்பது இந்த விஞ்ஞான காலத்தில் அவசியமில்லை. அவர்களுக்கு வாழ்வதற்கு ஏற்ற கல்வியைக் கற்பித்து வைத்தால் போதும்... அதுவே அழிக்க முடியாத பெரும் சொத்தாகும்.
- தேவைக்கும், இருப்புக்கும் இடையே இடைவெளி, தனக்கும் பிறர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாடு, ஆசைக்கும் திறமைக்கும் இடையே உள்ள வித்தியாசம்...இவையாவும் கவலைக்கு அடிப்படை ஆகின்றன. பிரச்னையைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். தீர்வு உடனே கிடைக்காவிட்டால் இயற்கைக்கு விட்டுவிடுங்கள். சிறிது காலம் பொறுத்திருங்கள். சரியான நேரத்தில் சரியான தீர்வு தானாகவே கிடைத்துவிடும். ஆரம்பத்தில்தான் எந்த ஒரு பிரச்னையும் பெரிதாகத் தோன்றும். அதற்குத் தீர்வு அதனுள் இருக்கிறது. அது தவறாமல் கிடைத்துவிடும். ●

RAMRAJ காட்டன்

வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 8 இதழ் 9

மார்ச் 2024

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

கே.ஆர்.நாகராஜன்

ஆசிரியர்

த.செ.ஞானவேல்

இதழாசிரியர்

வள்ளி

வடிவமைப்பு

உதயா

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜு தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

எதை வெல்ல வேண்டும்?

ஒரு சிறுவன் தனது கிராமத்தில் நடந்த ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டான். அவனைவிட வலுவாக இருக்கும் இரண்டு பையன்களோடு போட்டி. அந்தச் சிறுவன் தோற்றுவிடுவான் எனக் கூட்டம் நினைத்தது. ஆனால், எல்லோரும் ஆச்சர்யப்படும்விதமாக அவன் மன உறுதியோடும் நம்பிக்கையோடும் ஓடினான். கூட்டம் உற்சாகமாகக் கைதட்டி ஊக்கப்படுத்த, அவனே ஜெயித்தான்.

சிறுவனுக்குப் பெருமையாக இருந்தது. அடுத்த போட்டியிலும் அதே உற்சாகத்தோடு பங்கேற்றான். அவனுடன் போட்டிபோட்டது, இரண்டு இளைஞர்கள். இருவரும் அவனைவிட வலுவாகவும் துடிப்பாகவும் இருந்தவர்கள். இந்த முறையும் ஆவேசமாக ஓடி, முதல் ஆளாக வெற்றிக்கோட்டைத் தொட்டான்.

ஊர் மக்கள் அளித்த உற்சாகம், அவனுக்கு அதிக நம்பிக்கையைக் கொடுத்தது. "அடுத்த போட்டிக்கும் நான் தயார்" என்று கத்தினான். கூட்டத்தில் இருந்த முதியவர் ஒருவர் இதைக் கவனித்தார். சிறுவனைக் கூப்பிட்டார். ஒரு மூதாட்டி, கண் தெரியாத ஒரு நடுத்தர வயதுக்காரர் ஆகியோரை அவன் அருகே கொண்டுபோய் நிறுத்தினார். "ஓடு" என்றார்.

அந்த மூதாட்டியும், கண் தெரியாதவரும், 'எப்படி ஓடுவது' என்றுகூடத் தெரியாமல் குழப்பத்தில் நின்றுகொண்டிருக்க, இவன் வேகமாக ஓடி வெற்றிக்கோட்டைத் தொட்டான். ஆனால், கூட்டத்தில் ஒருவர்கூடக் கைதட்டவில்லை. சிறுவன் குழப்பத்துடன் முதியவரைப் பார்த்தான். "அவர்களையும் இணைத்துக்கொண்டு ஓடிப் பார்" என்றார் முதியவர். சிறுவன் யோசித்தான். மூதாட்டிக்கும் கண் தெரியாதவருக்கும் நடுவில் நின்று, அவர்களின் கைகளைப் பிடித்துக்கொண்டு நடந்தே சென்று வெற்றிக்கோட்டைத் தொட்டான். இதற்குமுன் எப்போதும் இல்லாத அளவுக்குக் கூட்டம் கைதட்டி அவனைப் பாராட்டியது.

எதில் இருக்கிறது கவனம்?

அலுவலகத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த ரமேஷ் ஒரே வாரத்தில் மேனேஜர் அறைக்கு வந்து, "சார், நான் ராஜினாமா செய்கிறேன்" என்றான். மேனேஜர் அவனைக் குழப்பமாகப் பார்த்து, "என்ன பிரச்னை?" என்றார்.

"இங்கே யாருமே சரியில்லை. அட்டெண்டர்கள் பலரும் கெட்ட வார்த்தை பேசுகிறார்கள். ஊழியர்கள் மற்றவர்களைப் பற்றித் தங்களுக்குள் ஏதேதோ வம்பு பேசுகிறார்கள். பலருக்கும் வேலையே தெரியவில்லை. இந்தச் சூழலில் இருந்தால், நானும் வீணாகிவிடுவேனோ என்று கவலையாக இருக்கிறது" என்றான் ரமேஷ்.

மேனேஜர் அவனைப் பார்த்து அன்பாகப் புன்னகைத்தார். "சரி, உன்னை நான் தடுக்கமாட்டேன். ஆனால், அதற்கு முன்பு எனக்காக ஒரு வேலை செய். இந்தக் கண்ணாடி டம்ளரில் வழிய வழிய தண்ணீர் இருக்கிறது அல்லவா? இதை எடுத்துக்கொண்டு ஆபீஸில் இந்த முனையிலிருந்து அந்த முனை வரை மூன்று முறை போய்விட்டு வா. ஒரு துளி தண்ணீர்கூடச் சிந்தக்கூடாது" என்றார்.

மேனேஜர் எதற்கு இதைச் சொல்கிறார் என்று புரியாமல் குழம்பினாலும், அதைச் செய்தான். "நீ இப்போது ஆபீஸைச் சுற்றிய நேரங்களில் அட்டெண்டர்கள் கெட்ட வார்த்தை பேசுவதையோ, ஊழியர்கள் வம்பு பேசுவதையோ கேட்டாயா?" என்று கேட்டார் மேனேஜர். யோசித்த ரமேஷ், "இல்லை" என்றான்.

"ஏன் உன்னால் இதையெல்லாம் கேட்க முடியவில்லை?" என்று அவர் கேட்டபோது ரமேஷ் பதில் சொல்லத் தெரியாமல் குழம்பினான். மேனேஜர் சிரித்துவிட்டுச் சொன்னார். "உன் கவனம் முழுக்க, கையிலிருந்த கண்ணாடி டம்ளரில் இருந்தது. தண்ணீர் சிந்திவிடக்கூடாது என்ற அக்கறையோடு இருந்ததால், மற்ற விஷயங்களில் உன் கவனம் போகவில்லை. வாழ்க்கையிலும் இப்படித்தான். நீ முக்கியமாக நினைக்கும் விஷயத்தில் உன் முழுக் கவனமும் இருக்க வேண்டும். அப்போது தேவையில்லாத விஷயங்கள் நம் கவனத்துக்கு வராது."

"எனக்குப் புரிந்தது சார்! நான் போய் என் வேலையை உற்சாகமாகப் பார்க்கிறேன்" என்றான் ரமேஷ்.

‘‘முன்பு நான் தனியாக ஓடி ஜெயித்தபோது கைதட்டாதவர்கள், இப்போது மட்டும் ஏன் பாராட்டினார்கள்?’’ என்று கேட்டான்.

‘‘பழைய போட்டிகளில் வென்றதைவிட இது மிகப்பெரிய வெற்றி. ஏனெனில், நீ மக்களின் மரியாதையை வென்றிருக்கிறாய். இதைத்தான் வெல்ல வேண்டும். எளியவர்களை இணைத்துக்கொண்டு பயணிப்பதைவிட மகத்தான செயல் எதுவும் இல்லை!’’ என்று சொன்னார் முதியவர்.

கதை நேரம்

‘நான்’ என்ற எண்ணம்!

ஒரு ஞானியைச் சந்தித்த மன்னன் ஒருவன், “எனக்கு நிம்மதி இல்லை” என்று புலம்பினான். “ஏன் உனக்கு அப்படி ஒரு நினைப்பு வருகிறது? உன் நாட்டுக்கு ஏதாவது பிரச்னையா?” என்று ஞானி கேட்டார்.

“இல்லை. என் நாட்டுக்கு அந்நியர்களால் அச்சம் இல்லை. எல்லோருமே வசதியாக இருப்பதால், திருடர் பயம் இல்லை. நாடு வளமாக இருப்பதால் அதிக வரிகள் விதிப்பதில்லை. முறையாக நீதி பரிபாலனம் நடக்கிறது. அதனால் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்” என்றான் மன்னன்.

‘‘இதையெல்லாம் நினைத்து நீ மகிழ்ச்சியோடு அல்லவா இருக்க வேண்டும்? உனக்கு ஏன் நிம்மதி போனது?” என்று ஞானி திரும்பவும் கேட்டார். “அதுதான் எனக்கும் புரியவில்லை. இந்த அரச பதவியில் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை” என்றான்.

“அப்படியானால் ஒன்று செய்! உன் நாட்டை என்னிடம் கொடுத்து விடு” என்றார் ஞானி. ஒரு நொடிகூட யோசிக்காமல், “எடுத்துக்கொள்ளுங்கள்” என்றான்.

உடனே ஞானி, “சரி, இந்த நாடு என்னுடையது. என் பிரதிநிதியாக இருந்து இன்றுமுதல் நீ நாட்டை ஆட்சி செய். நான் பிறகு வந்து கணக்கு வழக்குகளைப் பார்க்கிறேன்’’ என்றார். மன்னன் ஒப்புக்கொண்டான்.

ஓர் ஆண்டுக்குப் பிறகு ஞானி வந்தார். மன்னன் இப்போது மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். அவரை வரவேற்று உபசரித்தவன், நாட்டின் கணக்கு வழக்குகளை எடுத்து அவரிடம் கொடுத்தான். ‘‘அது கிடக்கட்டும், நீ எப்படி இருக்கிறாய்?” என்று கேட்டார். “நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறேன்” என்றான் மன்னன்.

“முன்பு செய்த அதே பணிகளைத்தான் செய்கிறாய். முன்பு ஏன் மன அழுத்தத்துடன் இருந்தாய்... இப்போது எப்படி நிம்மதியாக இருக்கிறாய்?” ஞானி கேட்டதும், விழித்தான் மன்னன்.

ஞானி சொன்னார். ‘‘அப்போது நீ, ‘இது என்னுடையது’ என்று எண்ணினாய். இப்போது, ‘இது எனதில்லை. நான் இங்கு வெறும் பிரதிநிதிதான்’ என்று எண்ணுகிறாய். அந்த மனம்தான் அனைத்துக்கும் அடிப்படை. நான் என்ற எண்ணம் வரும்போது, அத்தனை துயரங்களும் சூழ்ந்து கொண்டுவிடும். ‘எதுவும் எனதல்ல, எனக்குக் கொடுக்கப்பட்டது’ என்று உணர்ந்தால் துன்பங்கள் அத்தனையும் ஓடிவிடும்.” ●

வாழ்க்கையில் இதையெல்லாம் செய்யாதீர்கள்!

- யாரோ ஒருவர் மீது அளவுக்கு அதிகமான அன்பு செலுத்திவிட்டு, திடீரென அவரைப் புறக்கணிக்காதீர்கள். இப்படி ஒதுக்குவதை அவர்களால் தாங்க முடியாது. மனம் உடைந்துவிடுவார்கள்.
- நம்மை விட்டு விலகிய உறவுகள், நண்பர்கள் என்ன செய்கிறார்கள் என்று சதா உளவு பார்க்காதீர்கள். அது வீண் வேலை, நேர விரயம். அதைத் தெரிந்துகொண்டால் மன உளைச்சல்தான் ஏற்படும்.
- ‘இவர் ஏன் நம்மிடம் பேசவில்லை’, ‘அவர் ஏன் நம்மைச் சந்திக்கவில்லை’ என்று எவர் குறித்தும் யோசித்துக் கவலைப்படாதீர்கள். உங்களை முக்கியம் என்று நினைக்கும் எவரும் பேசுவார்கள், வந்து சந்திப்பார்கள்.
- உங்களை எவருடனும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். ஒவ்வொருவரும் வெவ்வேறு வழியில், வெவ்வேறு பணிகளைச் செய்யப் படைக்கப்பட்டவர்கள். உங்கள் வழியில் நீங்கள் பயணம் செய்யுங்கள்.
- உடல்நலத்தையும் மனநலனையும் கெடுத்துக்கொண்டு எந்த வேலைகளையும் செய்யாதீர்கள். அதனால் உங்களுக்குக் கிடைக்கும் ஆதாயங்களைவிட இழப்புகள் அதிகம்.
- நெருங்கிய உறவுகள் மற்றும் நண்பர்களின் திருமணம், பிறந்தநாள், வீட்டு முக்கிய நிகழ்வுகள் போன்ற தருணங்களில் அவர்களுடன் இணைந்திருக்க மறக்காதீர்கள். மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள எப்போதும் அருகில் இருங்கள்.
- எல்லா ஏமாற்றங்களையும் அவமானங்களையும் மனதுக்குக் கொண்டு போகாதீர்கள். நீங்கள் மனம் உடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் அடுத்தவர்கள் இதையெல்லாம் செய்திருக்கிறார்கள். அவர்களை ஜெயிக்க விடாதீர்கள்.
- நாம் தேவையில்லை என்று சிலர் நம்மை நினைக்கத் தொடங்கும் முன்பாக விலகி நிற்கக் கற்றுக்கொள்வது சிறந்தது.
- குடும்பத்தினரிடம் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளாதீர்கள். மற்ற எல்லோரும் கைவிட்டாலும், உங்களைத் தாங்கிப் பிடிக்கும் ஆதாரமாக இருக்கப் போவது குடும்பம்தான்.
- யாரையும் வலுக்கட்டாயமாக உங்கள் வாழ்க்கைப் பாதைக்குள் பிடித்து வைக்காதீர்கள். அவர்கள் விலகிப்போக விரும்பினால், விடைகொடுத்து அனுப்புங்கள்.
- உங்களை விட்டு விலகிப் போகிறவர்களுக்காக வருந்தாதீர்கள். விதி உங்களை யாருடனும் கட்டிப் போட்டு வைத்திருக்கவில்லை.
- உங்களைப் பிடிக்கவில்லை என்று சொல்பவர்களை நினைத்து ஏங்காதீர்கள். எல்லோருக்கும் நல்ல ரசனை இருப்பதில்லை.
- ஒவ்வொருவருக்காகவும் உங்களை ஒவ்வொரு முறையும் மாற்றிக்கொள்ளாதீர்கள். அப்புறம் உங்கள் இயல்பைத் தொலைத்துவிடுவீர்கள்.
- மகிழ்ச்சியாக இருப்பதற்கான காரணங்களைத் தேடிப் பிடியுங்கள். மகிழ்ச்சியைத் தொலைப்பதற்கான வாய்ப்புகளைத் தேடிப் போகாதீர்கள்.
- தனியாக ஒதுங்கி இருக்காதீர்கள். அலுவலகத்தில், தொழிலில், வியாபாரத்தில், வாழ்க்கையில், சக மனிதர்களுடன் எப்போதும் தொடர்பில் இருங்கள். புதிய புதிய அறிமுகங்களை உருவாக்கிக்கொள்ளுங்கள். வாய்ப்புகள் எங்கிருந்தும் வரலாம்.
- உங்களின் பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து வைத்திருங்கள். உங்கள் பலவீனங்களைச் சரிசெய்வது எப்படி என்று யாராவது சொல்லும் ஆரோக்கியமான விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால், அதையே வைத்து உங்களைத் தாழ்த்திப் பேச எவரையும் அனுமதிக்காதீர்கள்.

RAMRAJ
Littlestars®
KIDS DHOTIS • SHIRTS • KURTA

Culture India™
TRADITIONAL KURTA DHOTI
BY
RAMRAJ
Shop Online @ www.ramrajcotton.in

RAMYYAM
SAREES • KURTIS
Product by
RAMRAJ
Shop Online @ www.ramrajcotton.in

Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

RAMRAJ காட்டன்

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

வெண்மை

சந்தாதாரர் ஆகுங்கள்!

'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

ஓர் ஆண்டு சந்தா ரூ.200

இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

வெண்மை
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

வங்கிக் கணக்கு விவரம்: Venmaii
A/C No: 1809135000000299
Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch
IFSC Code: KVBL0001809.

மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா:	2 வருட சந்தா:
ரூ.~~200~~ ரூ.125 மட்டும்.	ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா:	2 வருட சந்தா:
ரூ.~~200~~ ரூ.125 மட்டும்.	ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்

நலம் தரும் நட்பு!

நாம் தடுமாறும்போது தாங்கிப் பிடிக்க நண்பர்கள் தேவை. தடம் மாறும்போது நெறிப்படுத்த நல்ல நண்பர்கள் தேவை. துன்பத்தில் ஆறுதல் சொல்ல, அருகிலேயே சில நண்பர்கள் தேவை. அன்பைப் பொழிந்து நம்மை வலிமையாக்க, வளமான நண்பர்கள் தேவை.

அதட்டி உருட்டி மிரட்டி நம்மைக் காத்து நிற்க ஒரு முரட்டு நண்பனும் தேவை. வழிகாட்டும் விளக்காக, உலகம் தெரிந்த சில நண்பர்கள் தேவை. நாம் சொல்வதை நம்பிக்கையுடன் அப்படியே ஏற்றுக்கொள்ள சில நண்பர்கள் தேவை. தவறு செய்யும்போது எதிர்த்துப் பேசி, பக்குவமாய் உண்மை சொல்லும் யதார்த்தமான நண்பர்கள் தேவை.

நலம் தரும் நண்பர்கள் அமைந்தால், அதைவிட சிறப்பு ஏதுமில்லை.

தவறைச் சரி செய்வோம்!

தவறு செய்யாதவர்கள் யாருமில்லை. அந்தத் தவறை எவ்வாறு மனதில் ஏற்றிக்கொள்கிறோம் என்பதே முக்கியம். தவறை நேர்மறை, எதிர்மறை என இரண்டு விதங்களாகப் பிரிக்கலாம். எதிர்மறைத் தவறு என்பது, செய்த தவறை நினைத்து நினைத்து மன உளைச்சல் கொள்வது. நாளடைவில் அது நம்மை முடக்கிவிடும். நேர்மறைத் தவறு என்பது, தவறை ஆராய்ந்து பார்ப்பது. எதனால் இந்தத் தவறு நேர்ந்தது, இதில் நம்முடைய பலவீனம் என்ன, நாம் எங்கே சறுக்கினோம் என்பதை உணர்வது. இது நமக்குக் கற்றுக் கொடுக்கும். மீண்டும் தவறு செய்யாதவாறு நம்மை மாற்றிக்கொள்ள உதவும். தவறிலிருந்து கற்றுக் கொள்வோம். அது தொடராமல் பார்த்துக்கொள்வோம்.

நம்பிக்கை!

- மழை வேண்டி ஒரு கிராமமே பிரார்த்தனை செய்தது. ஊரில் இருக்கும் எல்லோரும் அந்தப் பிரார்த்தனை நடைபெறும் இடத்துக்கு வந்தனர். ஒரு சிறுவன் மட்டும் கையில் குடை கொண்டு வந்தான். 'மழை பெய்யும்போது நனையாமல் இருக்க வேண்டும் அல்லவா?' என்றான். அது, நம்பிக்கை.
- குழந்தையை உயரே தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடினார் அப்பா. அந்தர வானத்தில் உயரச் செல்லும்போதும், அச்சமின்றிச் சிரித்தது அந்தக் குழந்தை. காரணம், அப்பா நம்மைப் பிடித்துக்கொள்வார் என்ற நம்பிக்கை.
- நாளை எப்படி எது மாறும் என்பது யாருக்குமே தெரியாது. என்றாலும், நிறைய விஷயங்களைத் திட்டமிடுகிறோம். காரணம், 'நல்லதே நடக்கும்' என்ற நம்பிக்கை.

வாயைத் திறந்து கேளுங்கள்!

'இவரிடம் உதவி கேட்டால் செய்வாரா', 'அவரிடம் பணம் கேட்டால் தருவாரா', 'இவர் நமக்காகச் சிபாரிசு செய்வாரா' என்றெல்லாம் மனதுக்குள் தயக்கம் முளைக்கிறது. நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம்கூட உதவி கேட்க முடியாதபடி அதுதான் பலரையும் தடுக்கிறது. ஆனால் உண்மை என்னவென்றால், நாம் கேட்டால் செய்வதற்குப் பலரும் தயாராகவே இருக்கிறார்கள். நம் மனதில் என்ன இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியாது அல்லவா? நாம்தான் வாய் திறந்து சொல்ல வேண்டும்.

இதுதொடர்பாக அமெரிக்காவில் ஸ்டான்லி மில்கிராம் ரயில் பரிசோதனை என்ற சோதனை நடைபெற்றது. பேராசிரியர் மில்கிராம் என்பவர் தன் மாணவர்களை ஒரு சோதனை செய்யச் சொன்னார். "நியூயார்க் நகரத்தின் சுரங்க ரயில்களில் போய் பயணம் செய்யுங்கள். அறிமுகம் இல்லாத பயணிகளிடம் போய், 'உங்கள் இருக்கையை எனக்குத் தர முடியுமா' என்று கேளுங்கள்" என்றார். அதன்படி போன மாணவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அதாவது, 100 பயணிகளில் 68 பேர் எழுந்து தங்கள் இருக்கையை விட்டுக் கொடுத்தார்கள்.

உதவி செய்யப் பலரும் தயார். வாயைத் திறந்து, வேண்டியதைக் கேளுங்கள்!

உணவு சொல்லும் உண்மைகள்!

- தோல்வி என்பது பெருங்காயம் போன்றது. தனியாகச் சாப்பிட்டால் கசக்கும். வெற்றி என்னும் சாம்பாரில் கரைந்துவிட்டால் மணக்கும். தோல்வியை வெற்றிக்கான படிக்கட்டாக நினைப்போம்.
- குக்கரில் பிரஷர் அதிகமாகும்போது விசிலடித்துக் கொண்டாடுகிறது. வேலைப்பளு அதிகரிக்கும்போது மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள். வேலை இனிக்கும்.
- லட்சியமும் முட்டையும் ஒன்று... தவறவிட்டால் உடைந்து விடும்!
- காம்பைக் கிள்ளிவிட்டு வைத்தாலே மிளகாய் நன்றாக இருக்கும். சோம்பேறித்தனம் என்பது மிளகாய்க் காம்பு போன்றது... கிள்ளி எறிந்துவிட வேண்டும்!
- வாழ்க்கை சிக்கலான இடியாப்பம்தான். அதில் அன்பு என்னும் தேங்காய்ப்பாலைக் கலந்தால் சுவைக்கும்.
- கோபத்தை உப்பைப் போலப் பயன்படுத்துங்கள். அதிகமானால் வாழ்க்கை சுவைக்காது.
- தலைக்கனம் என்பது வெந்நீர் போன்றது. அதை அடுத்தவர் மீது கொட்டாதீர்கள். நம் மீதே சிதறிப் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஏன் செய்ய வேண்டும்?

இத்தனை நாள் வீட்டில் ஜாலியாக விளையாடிக் கொண்டிருந்த நிர்மலை இப்போதுதான் பள்ளியில் சேர்த்திருக்கிறார்கள். அதனால் காலையில் சீக்கிரம் எழுந்துவிடுகிறான். அவனுக்கு ஒவ்வொரு நாளும் குழப்பம் தருவது, காலையில் எழுந்ததும் அம்மா செய்யும் வேலைதான். இவ்வளவு நாள் அவன் தாமதமாக எழுவதால் இதைப் பார்த்ததில்லை.

ஒருநாள் அம்மாவிடம் கேட்டுவிட்டான். "ஏன் இப்படி காலையில் எழுந்ததும் போர்வைகளை மடித்து, தலையணையை உதறி, படுக்கை விரிப்பில் சுருக்கங்களைச் சரிசெய்து நேர்த்தியாக வைக்க வேண்டும். திரும்பவும் இரவு வந்து படுக்கத்தானே போகிறோம். மேலும், படுக்கை அறைக்கு நம்மைத் தவிர யாரும் வந்து பார்க்கப் போவதில்லையே! அப்புறம் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்?"

அம்மா சிரித்துவிட்டுச் சொன்னார். "ஒவ்வொரு நாளும் தூக்கம் என்பது நமக்குக் கிடைக்கும் பரிசு. இப்படி ஒரு படுக்கையில் படுப்பதும் தூங்குவதும் பலருக்குக் கிடைக்காத வசதி. அந்த வசதியைத் தரும் படுக்கையை நாம் நேர்த்தியாக வைக்க வேண்டும். இப்படிச் சுத்தமாக இருந்தால்தான் இரவு வந்து படுக்கும்போது மனதுக்கு உற்சாகம் கிடைக்கும்" என்றார்.

சின்னச்சின்ன விஷயங்களில்கூட இப்படி நேர்த்தியாக இருந்தால், பெரிய பெரிய செயல்களை எளிதாகச் செய்ய முடியும்.

இயற்கை அக்கறை தரும் வாழ்க்கைப் பாடம்!

இந்த ஆண்டு சீக்கிரமே வந்துவிட்டது கோடை. மேற்குத்தொடர்ச்சி மலை வனங்கள் வறட்சியில் வாடுகின்றன. வளமான காவிரிப்படுகையில் விவசாயிகள் முடங்கிப்போய்க் கிடக்கிறார்கள். 'ஒரு தலைமுறைக் காலத்துக்குள் நம் வாழ்க்கை எப்படி மாறிப் போயிருக்கிறது' என்பதை கோடைக் காலம் ஒவ்வொரு முறையும் நமக்கு உணர்த்துகிறது. இயற்கை ஆர்வலர்கள் பலர் மரம் நடும் முயற்சியிலும், நீர்நிலைகளைத் தூர் வாரும் பணிகளிலும் ஈடுபடுகிறார்கள். எல்லோரும் இதைச் செய்ய வாய்ப்பில்லைதான்! ஆனால், ஒரு தனிமனிதனாக ஒவ்வொருவருக்கும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வாழ வேண்டிய கடமை உண்டு.

நம் வீட்டில் பகலில் தேவையே இல்லாமல் எரியும் ஒரு பல்ப், உலகின் எங்கோ ஒரு மூலையில் நிலக்கரியை எரித்து மின்சாரம் எடுக்க வைத்து, கார்பன் டை ஆக்சைடை இந்தச் சூழலில் கலக்கச் செய்கிறது. வேண்டாம் என்று நம் தோட்டத்தில் வெட்டி வீழ்த்தப்படும் ஒரு மரம், நமக்குச் சுவாசிக்க ஆக்சிஜன் தருவதை நிறுத்திவிடுகிறது. நாம் அக்கறையோடு சில முயற்சிகளை எடுத்தால், சூழல் இனிமையாவதோடு, நம் செலவுகளும் குறையும். அதற்கான வழிகள்...

மறு பயன்பாடு: முடிந்த அளவுக்கு எல்லாவற்றையும் மறு பயன்பாடு செய்யத் திட்டமிடலாம். காய்கறிக் கடைக்குப் போகும் ஒவ்வொரு முறையும், வீட்டிலிருந்து பை கொண்டு போகலாம். கடையில் பாட்டில் தண்ணீர் வாங்கி, சூழலில் குப்பையைச் சேர்க்காமல்... வீட்டில் இருந்தே பாட்டிலில் தண்ணீர் எடுத்துப் போகலாம். வீட்டு உபயோகத்துக்காக வாங்கும் பிளாஸ்டிக் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பேப்பர் என எல்லாவற்றிலும் கவனமாக இருக்க வேண்டும்.

ஏ.சி கசிவு தவிர்க்கலாம்: கோடை நாட்களில் பலராலும் இப்போது ஏ.சி இல்லாமல் இருக்க முடிவதில்லை. ஆனால், உரிய வெப்பத்தடுப்பு முறைகளைச் செய்தால், ஏ.சி மற்றும் மின்விசிறிகளால் ஏற்படும் மின் கட்டணத்தை 25 சதவிகித அளவுக்குக் குறைக்கலாம். ஏ.சி ஓடும் படுக்கை அறையில் தாழ்கூரை அமைத்து, சுவர்களில் எமல்ஷன் பெயின்ட் அடித்து, ஜன்னல் மற்றும் கதவு இடுக்குகள் வழியே குளிர்க்காற்று வெளியேறுவதைக் குறைத்தால், மின்சாரச் செலவு மிச்சமாகும். மொட்டை மாடியில் அனல் தடுப்பு பெயின்ட் பூசி, வீட்டின் அனலைக் குறைக்கலாம்.



மின் விளக்குகளை மாற்றலாம்: பழைய மாடல் பல்புகள் நிறைய மின்சாரத்தை எடுத்துக்கொண்டு எரிகின்றன. அதோடு எரியும்போது வெப்பமும் வெளிப்படுகிறது. எல்.இ.டி பல்புகள், மிகக்குறைந்த மின்சாரச் செலவில், மிக அதிக வெளிச்சம் தருகின்றன, நீண்ட காலமும் உழைக்கின்றன.

வாகனப் பயன்பாட்டைக் குறைக்கலாம்: நாம் வாகனத்தைத் தவிர்க்கும் ஒவ்வொரு பயணத்திலும் சூழலைப் பாதுகாக்கிறோம். தெருமுனையில் இருக்கும் காய்கறிக் கடைக்கு நடந்து செல்லலாம்; பக்கத்துத் தெருவில் இருக்கும் கோயிலுக்கு சைக்கிளில் போகலாம். பைக், கார் எனத் தனிப்பட்ட பயண வாகனத்தைத் தவிர்த்துவிட்டு பஸ்ஸிலும், ரயிலிலும் செல்வதுகூட ஒருவகை எரிபொருள் சேமிப்புதான். இது பெட்ரோல் செலவையும் குறைக்கும்; உடலுக்கும் மிகச் சிறந்த பயிற்சி.

எரிசக்தி சேமிக்கும் பொருட்களை வாங்கலாம்: புதிதாக வாகனம் வாங்கும்போது, 'எது அதிக மைலேஜ் தருகிறது' என்று பார்த்து வாங்கவும். வீட்டு உபயோகப் பொருட்களும்கூடக் குறைவான மின்சாரத்தைப் பயன்படுத்தும்விதமாக இப்போது வருகின்றன. இதைப் பொறுத்து அவற்றுக்கு நட்சத்திரக் குறியீடு தருகிறார்கள். மூன்று ஸ்டார் இருக்கும் ஏ.சி–யைவிட ஐந்து ஸ்டார் இருக்கும் ஒரு ஏ.சி.யானது மிகக் குறைவான மின்சாரத்தில் மிக அதிக குளிர்ச்சியைத் தருகிறது. விலை சற்று அதிகமாக இருந்தாலும், இது மின்சாரச் செலவைக் குறைக்கும்; சூழலுக்கும் நல்லது.

ஹீட்டரில் கவனம் வைக்கவும்: ஏ.சி.யைவிட ஹீட்டர்தான் அதிக மின்சாரத்தை எடுத்துக்கொள்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? ஒன்பது மணிக்குக் குளிப்பதற்கு காலை ஏழு மணிக்கே ஹீட்டரைப் போட்டுக்கொள்வதைத் தவிர்க்கவும். பழைய மாடல் ஹீட்டருக்கு மின்சாரம் அதிகம் தேவை. இப்போது இன்ஸ்டன்ட் ஹீட்டர்கள் வந்துவிட்டன. நொடிகளில் தண்ணீரைச் சூடாக்கித் தரும்.

நிறுத்தக் கற்றுக்கொள்ளவும்: ஒரு போன் அழைப்பு வந்ததும், எரியும் விளக்கு, ஓடும் ஃபேன் என்று எதையும் நிறுத்தாமல் அறையைவிட்டு வெளியில் வந்து அரை மணி நேரம் பேசுகிறவர்கள், வீட்டுக்கும் நாட்டுக்கும் ஏராளமான இழப்பு ஏற்படுத்துகிறார்கள். பயன்படுத்தாத நேரங்களில் எதையும் சுவிட்ச் ஆஃப் செய்துவிடப் பழகுங்கள்.

வேட்டி கொண்டாட்டம்!

- நமது பாரம்பரிய உடையான வேட்டி அணிந்து தங்களது இல்ல விழாவைக் குடும்பத்தினருடன் இணைந்து கொண்டாடுகிறீர்களா? அப்படியானால் அந்தப் புகைப்படத்தை எங்களுக்கு வாட்ஸ்அப்பில் அனுப்பி வைக்கவும்.
- தங்கள் இல்லத்தில் குறும்பு குட்டீஸ்களுக்கு வேட்டி அணிவித்து விழா கொண்டாடுகிறீர்களா? அந்தப் புகைப்படத்தை அனுப்பி வைக்கவும்.

தேர்வாகும் புகைப்படங்கள் 'வெண்மை' இதழில் பிரசுரமாகும். புகைப்படம் அனுப்பும்போது தங்களது முழு முகவரியையும் அனுப்பவும்.

வாட்ஸ்அப் எண்: 98422 74137

தண்ணீர் சிக்கனம்: தேவையானபோது மட்டும் குழாயைத் திறந்து பயன்படுத்துங்கள். குழாயைத் திறந்துவிட்டு ஷேவிங் செய்தால் சுமார் 5 லிட்டர் தண்ணீர் செலவாகும். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்துக்கொண்டு ஷேவ் செய்தால், முக்கால் லிட்டரில் முடித்துவிடலாம். பல் துலக்குவதற்கும் இதே கதைதான். இப்படி அக்கறையுடன் செய்பவர்கள், அடுத்த தலைமுறைக்கான தண்ணீரைச் சேமித்து வைக்கிறார்கள்.

மரம் நடவும்: உங்கள் வீட்டுத் தோட்டத்தில் நிறைய இடம் இருக்கிறதா? உங்கள் ஊரின் மண்ணுக்கு எது ஏற்றது என்று அறிந்து, அந்த இனத்தில் ஒரு மரம் நடுங்கள். இடம் குறைவாகத்தான் இருக்கிறதா? அதற்கு ஏற்றபடிச் சிறிய அளவில் வளரும் மரங்களை நடுங்கள். மண் பரப்பே இல்லாவிட்டாலும், தொட்டிகளிலாவது செடிகளை வளருங்கள். ஒற்றை மரம், தன் வாழ்நாளில் ஒரு டன் கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி, சூழலைச் சுத்தம் செய்கிறது.

மற்றவர்களுக்கும் சொல்லித் தரவும்: மறுசுழற்சி, மறு பயன்பாடு, எரிபொருள் சேமிப்பு, மரம் நடுதல் என்று சூழலைக் காக்கும் எல்லா விஷயங்கள் பற்றியும் உங்கள் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பகிர்ந்துகொள்ளுங்கள். இதில்தான் வாழ்க்கை நிறைவடைகிறது. ●

கிராமிய சேவைத் திட்டத்தில் ராம்ராஜ்!

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கத்தின் சார்பில் கிராமிய சேவைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு கிராமத்தில் வசிக்கும் அனைவருக்கும் இனிமையான வாழ்வுக்கு வழிகாட்டும் மனவளக் கலை பயிற்சிகள் தந்து மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் சிறப்பு.

திருப்பூர் மாவட்டம் கணக்கம்பாளையம் கிராமம், கிராமிய சேவைத் திட்டம் செயல்படுத்தப்படும் 300–வது கிராமம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. உலக சமுதாய சேவா சங்கத்தின் திருப்பூர் மண்டலம் சார்பில் இதன் நிறைவு விழா கணக்கம்பாளையம் வாஷிங்டன் நகரில் 26.01.2024 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ எஸ்.கே.எம்.மயிலானந்தன் அவர்கள், துணைத் தலைவர்கள், இயக்குநர்கள், மண்டலத் தலைவர், முக்கிய விருந்தினர்கள் மற்றும் ஊர்ப்பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனரும் உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவருமான திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் கலந்துகொண்டு, கொடியேற்றி விழாவைத் தொடங்கிவைத்தார். மேடையில் அனைவரையும் வரவேற்று யோகாவின் அவசியம் மற்றும் மனவளக்கலையின் மாண்புகளைப் பற்றி விளக்கி உரை நிகழ்த்தினார்.

கொங்குநாடு அறக்கட்டளை ஆண்டு விழாவில் ராம்ராஜ்!

சென்னை கொங்குநாடு அறக்கட்டளையின் 34–ம் ஆண்டு விழா திருப்பூரில் நடைபெற்றது. இதில் சான்றோர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வும், மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்வும் நடைபெற்றன. ராம்ராஜ்காட்டன்நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டு விருதும் உதவித்தொகையும் வழங்கி சிறப்பித்தார்.

பள்ளி ஆண்டு விழாவில் ராம்ராஜ்!

திருப்பூரில் செயல்படும் சிவா நிகேதன் பள்ளி (SNS– Shiva Niketan School) ஆண்டு விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். பள்ளி நிர்வாகிகள் அவரை வரவேற்றனர். விழாவில் சிறந்த மாணவர்களுக்கு அவர் பரிசுகளை வழங்கினார். மாணவர்கள் தேர்வில் வெற்றிபெற்று வாழ்வில் உயர்வதற்கான வழிகளை விளக்கி, அவர்களுக்கு வாழ்த்துகள் கூறி அவர் சிறப்புரையாற்றினார்.

திருப்பூர் புத்தகத் திருவிழாவில் ராம்ராஜ்!

திருப்பூர் மாவட்ட நிர்வாகமும் திருப்பூர் பின்னல் புக் டிரஸ்டும் இணைந்து 20வது திருப்பூர் புத்தகத் திருவிழாவை நடத்தின. 11 நாட்கள் நடைபெற்ற இந்தப் புத்தகத் திருவிழாவில் ஒரு நாள் நிகழ்வை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் வழங்கினார். அவர் தலைமையேற்று நடத்தும் வெற்றித் தமிழர் பேரவை மற்றும் திருப்பூர் நகைச்சுவை மன்றம் ஆகியவற்றின் சார்பில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்ச்சிக்கு திரு.கே.ஆர்.நாகராஜன் தலைமை தாங்கினார். இளைய தலைமுறையின் வாழ்க்கையைப் புத்தக வாசிப்பு எப்படி மேம்படுத்தும் என்பது குறித்து அவர் சுவாரசியமாகத் தன் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து எடுத்துக்கூறி உரையாற்றினார். நகைச்சுவை நாவலர் திரு. மா.இராமலிங்கம் தலைமையில் பட்டிமன்றமும் நிகழ்வில் நடைபெற்றது.

வாழ்க்கைத்துணைக்கான வாழ்க்கைப் பாடம்!

‘திருமணத்துக்குப் பிறகு கணவர் மாறிவிடுவார் என்ற நினைப்பில் பெண்கள் திருமணம் செய்கிறார்கள். மனைவி மாறமாட்டாள் என்ற நினைப்பில் ஆண்கள் திருமணம் செய்கிறார்கள். இருவரின் எதிர்பார்ப்பும் நிறைவேறுவதில்லை’ என்று ஒரு ஜோக் உண்டு. கணவன் மனைவிக்கு மத்தியில் இணக்கமான உறவும் புரிதலும் ஏற்படுவதற்கு, அவர்கள் சில வாழ்க்கைப் பாடங்களை அறிய வேண்டும்.

திருமணம் முடிந்த மறுநாளிலிருந்தே, ‘இதைச் செய்’, ‘இப்படிச் செய்யாதே’ என்று தங்கள் வாழ்க்கைத்துணைக்கு உத்தரவு போடும் பலர் உண்டு. ஏதோ ஓர் அலுவலகத்தில் புதிதாகச் சேர்ந்த பணியாளருக்குச் சொல்வது போல, ‘இந்தக் குடும்பத்தில் இதுதான் வழக்கம்’ எனப் பல விதிகளைச் சொல்பவர்களும் உண்டு.

ஒருவரை ‘எப்படி இருக்கிறார்’ என்று பார்த்து விருப்பப்பட்டுத் திருமணம் செய்கிறோமோ, அவரை அப்படியே அதே இயல்புகளுடன் இருக்க விடுவதுதான் அவருக்குச் செய்யும் மரியாதை. வாழ்க்கைத்துணையை நமது ஜெராக்ஸ் பிரதி போல மாற்றிவிடுவது திருமணத்தின் வெற்றி அல்ல!

ஒரே மாதிரிச் சிந்திப்பவர்களும், ஒரே மாதிரியான வாழ்க்கைமுறைக்குப் பழகியவர்களும் மட்டுமே பொருத்தமான தம்பதிகளாக இருக்க முடியும் என்பதெல்லாம் மிகைப்படுத்தப்பட்ட கற்பனை. பல துண்டுகளாக வெட்டப்படும் புதிர்க்கட்டங்களைச் சேர்த்து உருவங்களை உருவாக்கும் விளையாட்டைப் பார்த்திருக்கிறீர்களா? நீளமாக நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு துண்டு, தனக்குள் பள்ளமான இடைவெளி வைத்திருக்கும் துண்டுடன்தான் பொருந்தும். ஒரே மாதிரி இருக்கும் இரண்டு துண்டுகளைப் பொருத்தவே முடியாது. இப்படிப்பட்ட வித்தியாசங்கள்தான் வாழ்வின் அழகு!

சேமிக்கும் பழக்கமே இல்லாத ஒருவர், திருமணமான அடுத்த நாளே பணம் சேமிக்கத் தொடங்கமாட்டார். வாழ்க்கையில் சில இயல்புகள் மாற்ற முடியாதவை. ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’ என்று பழமொழியே உண்டு. சிலர் திருமணத்துக்குப் பிறகு தங்கள் வாழ்க்கைத்துணையை மாற்ற நினைக்கிறார்கள். வாழ்க்கைத்துணையைத் திருத்துவதற்குத் திருமணம் ஒன்றும் சீர்திருத்தப் பள்ளி அல்ல! இந்த முயற்சிக்குப் பெரும்பாலும் எதிர்ப்பே கிளம்பும். மாற்றம் என்பதைப் பொதுவாக மனித மனம் ஏற்பதில்லை. மாற்றத்தை முதலில் எதிர்க்கும், மாற்ற நினைக்கும் நபர்மீது அதைத் தொடர்ந்து வெறுப்பு ஏற்படும். இது திருமண வாழ்க்கையில் நிம்மதியை ஏற்படுத்தாமல், அவநம்பிக்கையையே உருவாக்கும்.

குடும்பத்தில் பேசி நிச்சயிக்கும் திருமணங்களில்கூட, ஒருவரைப் பற்றி மற்றொருவர் முழுவதும் தெரிந்துகொள்ள முடிகிறது. தனிப்பட்ட விருப்பங்கள், ரசனைகள், கனவுகள், உணவுப்பழக்கம் எனச் சகல விஷயங்களையும் அறிந்தபிறகே

திருமணம் செய்துகொள்கிறார்கள். இதன் அர்த்தம், 'உன் விருப்பங்கள், ரசனைகள் மற்றும் பழக்க வழக்கங்களில் எனக்குக் கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், இந்தக் கணத்தில் நீ எப்படி இருக்கிறாயோ, அப்படியே உன்னை ஏற்றுக்கொள்கிறேன்' என்பதே! மாறாக, 'திருமணத்துக்குப் பிறகு உன்னைத் தலைகீழாக மாற்றிக்காட்டுகிறேன்' என்று மனதுக்குள் சவால் விடுவதல்ல இல்லறம்.

திருமணம் முடிந்து நிறைய எதிர்பார்ப்புகளுடனும், பெரும் நம்பிக்கைகளுடனும் இருவரும் இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கிறார்கள். அப்போது அன்புதான் இருவரையும் பிணைக்க வேண்டும். எடுத்த எடுப்பிலேயே 'மாற்றம்' பற்றிப் பேசினால், வெறுப்பு இருவரையும் விலக்கி வைத்துவிடும்.

வாழ்க்கைத்துணையை மாற்றவே கூடாதா? அவர் மாறவேண்டும் என்று கேட்கவே கூடாதா? அப்படி அர்த்தம் இல்லை. எதில் மாற்றம் தேவை என்ற தெளிவு வேண்டும். அதை எப்போது செய்ய வேண்டும் என்பதையும் புரிந்துகொள்வது நல்லது.

மனைவிக்கு பிங்க் கலர் பிடித்திருக்கும். ஆனால், "இந்த கலரில் நீ சேலை கட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. இனிமேல் கட்டாதே" என்று கணவர் சொன்னால், அது வெறுப்பு ஏற்படுத்தும் மாற்றம். கணவருக்கு கத்தரிக்காய் பிடிக்காமல் இருக்கலாம். "அது என்ன 'இது பிடிக்கும்', 'அது பிடிக்காது' என்று பட்டியல் கொடுப்பது? இன்றைக்கு நம் வீட்டில் கத்தரிக்காய் பொரியல். நீங்க சாப்பிடறீங்க" என்று மனைவி வற்புறுத்தினால் அதுவும் அதிருப்தியை ஏற்படுத்தும். தனிப்பட்ட ரசனைகள், விருப்பங்களில் திணிப்பு கூடாது.

ஆனால், கணவரின் புகைப்பிடிக்கும் பழக்கமோ, மனைவியின் ஆடம்பரச் செலவோ குடும்பத்துக்குக் கேடு விளைவிக்கும் ஆபத்து. இதைப் பேசி மாற்றித்தான் ஆக வேண்டும். ஆனால், அதை மிகக் கவனமாகச் செய்ய வேண்டும். பல ஆண்டுகளாக வேர்விட்டு ஆழமாக வேரூன்றியிருக்கும் ஒரு பழக்கத்தை மாற்றுவது அத்தனை சுலபம் அல்ல. என்றாலும், அது சாத்தியமில்லாத விஷயமும் அல்ல.

திருமணம் என்பது இரண்டு தனிநபர்களுக்கு இடையிலான உயிர்ப்புள்ள ஓர் உறவு. வெவ்வேறு குடும்பச் சூழல்களில் பிறந்து, வெவ்வேறு விதமான ரசனைகளுடன் வளர்ந்த இரண்டு பேர் திருமண உறவால் இணைகிறார்கள்.

பொதுவாகவே ஆண்களும் பெண்களும் வெவ்வேறு விதமான ரசனைகளைக் கொண்டவர்கள். அவர்களின் உணர்வுகளைத் தூண்டுவது வேறு வேறு ஹார்மோன்கள். வாழ்க்கையை இருவரும் வெவ்வேறு விதமாகப் பார்ப்பார்கள். ஒரே சம்பவத்தையே இருவரும் பார்க்கும் கோணங்கள் வேறாக இருக்கும். அதனால் அவர்களுக்குள் கெமிஸ்ட்ரி உருவாவதற்குக் கொஞ்சம் தாமதமாகும். இருவரும் ஒருமித்த சிந்தனையால் நெருங்க முடியாது. ஒருவர் மீது இன்னொருவர் காட்டும் அன்பாலும் பரிவாலும்தான் நெருங்க முடியும். இப்படி உணர்வுரீதியாக நெருங்குவதால் ஏற்படும் பிணைப்புதான், உண்மையான அன்பை இருவருக்குள்ளும் ஊற்றெடுக்கச் செய்யும். இல்லறம் செய்யும் மாயவித்தை இது.

இப்படி இணைந்த பிறகே மாற்றம் பற்றிப் பேச வேண்டும். 'இந்தத் தீய பழக்கம் நம் இல்லறத்தில் என்னென்ன மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது? குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் அது என்ன பாதிப்புகளைத் தரும்' என்று மனம்விட்டு உரையாட வேண்டும். இருவரும் இப்படி உரையாடும்போது மாற்றங்கள் சாத்தியம். தீய பழக்கத்துக்காக ஒருவரை வாழ்க்கைத்துணை ஓயாமல் திட்டிக்கொண்டிருந்தால், அவர் மாறுவது கடினம். அவருக்குக் குற்ற உணர்வை ஏற்படுத்தினால், அவர் நிச்சயம் யோசிப்பார்.

ஒருவருக்கான இன்னொருவர் விட்டுக் கொடுப்பதும், ஒருவரின் தவறுகளை இன்னொருவர் சகித்துக்கொள்வதும்தான் திருமண வாழ்வை இனிமையானதாக ஆக்குகிறது. ஆனால், தம்பதியருக்குள் இருக்கும் உறவையே பலவீனம் அடையச் செய்யும் தீய பழக்கங்களைச் சகித்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அப்படி ஒருவரை இன்னொருவர் சகித்துக்கொண்டே இருந்தால், அது குடும்பச்சூழலை மோசமாக மாற்றிவிடும். வாழ்க்கைத்துணைக்காகத் தன் தீய பழக்கத்தை அவர் மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும். படிப்படியாகவே இந்த மாற்றம் நிகழும். இப்படி மாறும் நேரத்தில் மனவலிமையுடன் அதில் உறுதியாக நிற்க, வாழ்க்கைத்துணை தோள் கொடுக்க வேண்டும். ●

இளம்வயதுப் பாடங்கள்!

இளைய தலைமுறைக்கு 20 முதல் 30 வயது வரையுள்ள காலம் மிக முக்கியமானது. கல்வியை முடித்து, வேலையில் அல்லது தொழிலில் இணைந்து, திருமணம் செய்துகொண்டு புதுவாழ்வை ஆரம்பிக்கும் பருவம் இதுதான். கல்வியை முடித்திருக்கும் இந்தப் பருவத்தில் அவர்கள் வாழ்க்கைக்கல்வியைப் பெற வேண்டும். அதுவே தங்கள் தேவைகளை உணரவும் தெளிவான முடிவுகளை எடுக்கவும் அவர்களுக்கு வழிகாட்டும். அவர்கள் கற்க வேண்டிய பாடங்கள் என்னென்ன?

❖ கல்வி மட்டுமே போதும் என நினைக்கக்கூடாது. சிறந்த கல்லூரியில் படித்து நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெறுவதும், புத்திசாலித்தனமும் மட்டுமே வேலை வாங்கித் தந்துவிடாது. என்ன வேலைக்குப் போகிறீர்களோ, அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். உலக அளவில் அந்தத் துறையின் போக்கு எப்படி இருக்கிறது என மாற்றங்களை அறிந்துகொள்ள வேண்டும். கடின உழைப்பும் முக்கியம்.

❖ கல்லூரி நாட்களில், இரவில் நீண்ட நேரம் கண்விழித்துப் படித்திருக்கலாம். அதிகாலையில் விழிப்பதே பழக்கமாக இல்லாமல் போயிருக்கலாம். ஏதேனும் கெட்ட பழக்கங்களுக்கும் சோம்பேறித்தனத்துக்கும் அடிமை ஆகியிருக்கலாம். அவை எல்லாமே 'டீன் ஏஜ் பருவ விளையாட்டுத்தனங்களின் ஓர் அங்கம்' என எடுத்துக்கொள்ளுங்கள். கல்லூரியை விட்டு வெளியில் வந்ததும் அவற்றைத் தலைமுழுகி விடுங்கள். வேலை, தொழில், வியாபாரம் என வாழ்க்கையில் புதிய பயணத்தைத் தொடங்கும்போது, ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது அவசியம்.

❖ கல்லூரிப் பருவத்தில் சிலர் பணத்தைத் தண்ணீராகச் செலவழிக்கப் பழகியிருப்பார்கள். சம்பாதிக்க ஆரம்பிக்கும்போதுதான் பணத்தின் அருமை புரிந்திருக்கும். அந்த வயதிலிருந்தே சேமிக்கப் பழக வேண்டும். 'எப்போதோ வரப் போகிற முதுமைப் பருவத்துக்கு 25 வயதில் ஏன் சேமிக்க வேண்டும்' எனச் சிலர் நினைக்கலாம். அவர்கள் கூட்டு வட்டியின் பலன் தெரியாதவர்கள். 25 வயதில் சேமிக்க ஆரம்பிக்கும் பணம், 60 வயதில் சுமார் 64 மடங்கு உயரக்கூடும்.

❖ பணம் மட்டுமே மகிழ்ச்சியைத் தரும் என நினைக்காதீர்கள். வாழ்க்கையில் பணம் முக்கியம்தான். அதைத் தாண்டியும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் விஷயங்களை மறந்துவிடாதீர்கள். இசை, உடற்பயிற்சி, யோகா, விளையாட்டு என வாழ்க்கையை இனிமையாகவும் ரசனையாகவும் மாற்றும் மற்ற விஷயங்களும் வேண்டும். இல்லாவிட்டால் இயந்திரமாக மாறிவிடுவீர்கள்.

❖ எதற்காகவும் நிலைகுலைந்து போகாதீர்கள். வேலையில் ஏற்படும் பின்னடைவு, தொழிலில் சந்திக்கும் சறுக்கல், வியாபாரத்தில் எதிர்கொள்ளும் நஷ்டம், நெருங்கிய உறவுகள் மனவேறுபாடு ஏற்பட்டுப் பிரிந்துபோவது... இவை எல்லாமே வாழ்க்கையின் ஓர் அங்கம்தான். இந்த அனுபவங்களே வெற்றிக்கு அடித்தளமாக மாறும். முள் பாதைகள்தான் அழகிய தோட்டங்களுக்கு உங்களை அழைத்துப் போகும்.

❖ வேலையோ, தொழிலோ, வியாபாரமோ, எதையும் நீங்கள் செய்ய ஆரம்பிக்கும்போது எல்லா திசைகளில் இருந்தும் யோசனைகள் வரும். நண்பர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தினர் எல்லோரும் 'இதைச் செய்', 'அதைச் செய்' என அறிவுரைகள் சொல்வார்கள். இங்கே பஞ்சமில்லாமல் அது நிறைய கிடைக்கும். யார் என்ன சொன்னாலும், முடிவு உங்களுடையதாக இருக்கட்டும். உங்களால் எதைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பது உங்களுக்கு மட்டுமே தெரியும்.

❖ எல்லோருக்கும் பிடித்தமானவராக இருக்க வேண்டும் என ஆசைப்படாதீர்கள். அலுவலகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்கள், கீழ்நிலையில் பணிபுரிபவர்கள் என எல்லோரிடமும் நல்ல பெயர் எடுக்க நினைக்காதீர்கள். அப்படி இருக்க நினைத்தால், பல விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். வளைந்து போக நேரிடும். கண்டிப்பும் அன்பும் கலந்த கலவையாக இருங்கள். அதுதான் நல்லது.

❖ நட்புகளை இழக்க நேர்வதற்காக வருந்தாதீர்கள். வேலைக்காக உலகின் எந்த மூலைக்கும் மனிதர்கள் செல்லும் இந்தக் காலத்தில், சில நண்பர்கள் காலப்போக்கில் தொடர்பற்றுப் போவார்கள்தான். உங்களோடு பள்ளியில் படித்த பலர், கல்லூரி வாழ்க்கையில் காணாமல் போவார்கள். கல்லூரியில் படித்தவர்கள், வேலைக்குப் போனபின் தொடர்பில்லாமல் போவார்கள். இதுதான் யதார்த்தம். போனவர்களை நினைத்து வருந்தாமல், புதிய நட்புக்களை உருவாக்குங்கள்.

❖ சொந்த ஊரிலேயே காலம் முழுக்க இருக்க வேண்டும் என ஆசைப்படாதீர்கள். பறவை எங்கேயோ தூக்கிப் போய்ப் போடும் விதை, அந்தப் புது இடத்தில்தான் வளர்கிறது. நாற்றங்காலில் பிடுங்கப்படும் பயிர், வேறு இடத்தில்தான் ஊன்றப்படுகிறது. எங்கு சென்றால் வளர்ச்சி கிடைக்குமோ, அங்கு செல்லுங்கள். 20 முதல் 30 வயதுக்குள் இந்த மாற்றங்களைச் செய்துகொண்டால், எதிர்காலம் உறுதியானதாக ஆகும்.

❖ வேலை, திருமணம், புது வீடு என வாழ்க்கையின் முக்கியமான விஷயங்களில் முடிவெடுப்பதில் அவசரம் காட்டாதீர்கள். 'என் நண்பர்கள் எல்லோரும் வேலைக்குப் போய்விட்டார்கள். எனக்கு இன்னும் கிடைக்கவில்லை' எனப் பதற்றமாகி ஏதோ ஓர் இடத்தில் சேர்ந்துவிடாதீர்கள். '30 வயதுக்குள் வீடு வாங்க வேண்டும்' எனச் சிக்கலான இடத்தில் வீடு வாங்கிவிடாதீர்கள். வாழ்க்கை முழுக்க வேதனைப்பட வேண்டியிருக்கும்.

❖ 'இவர் நமக்கு நம்பகமான நண்பர்' என நினைத்து யாரிடமாவது பகிர்ந்துகொண்ட ரகசியங்கள், ஒரே நாளில் ஊருக்கே தெரிந்துவிட்டால் சங்கடம் மிஞ்சும். 'யார் நல்லவர், யார் கெட்டவர்' என்று பிரித்துப் பார்க்கத் தெரியாமல் ஏமாறும் அனுபவங்கள் இந்த வயதில் நிறைய கிடைக்கும். யாரையும் அவர்களின் முகமூடியைத் தாண்டி புரிந்துகொள்ளும் பக்குவத்தைப் பெறுங்கள். ●

வாசகர் கடிதம்



ராம்ராஜ் 'வெண்மை எண்ணங்கள்' மிகச்சிறந்த இதழ். ஒரே பொருண்மையில் வெளிவரும் பல்வேறு தரப்பட்ட கருத்துகளின் களஞ்சியமாக விளங்குகிறது. பொக்கிஷம் என்றுகூடப் பெருமிதமுடன் கூறலாம். இந்த இதழில் வரும் ஒரு பக்கக் கதைகள், எளிதில் புரியும் வகையில் மிளிர்கின்றன. தன்னம்பிக்கையுடன் கூடிய வார்த்தைகள், மனக்குழப்பத்தில் இருப்பவரை தெளிந்த நீரோடையைப் போலத் தெளிவாக்குகிறது. நான் மாணவர்களுடன் உரையாற்றும் ஒவ்வொரு மேடையிலும் 'வெண்மை எண்ணங்கள்' இதழிலிருந்து கதைகளைத் தொடர்ந்து கூறி வருகிறேன். கதை வடிவில் கருத்துகளைச் சொல்வதால் பங்கேற்பாளர்களுக்கு எளிதில் புரிகின்றது. சமுதாயம் பயனுறத் தாங்கள் செய்யும் இந்த அறப்பணி நாளும் வளர மனம் நிறைந்த வாழ்த்துகள்.

– எஸ்.பரமசிவம், நூலகர்,
கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும்
ஆராய்ச்சிக் கல்லூரி, கோயம்புத்தூர்.

மனிதர்களுக்கு மதிப்பு கொடுங்கள்!

ஒரு குடும்பத்தைத் தன் தோள்களில் தாங்கிவந்த தந்தை எதிர்பாராதவிதமாக இறந்துபோனார். அவருக்குப் பின் மூத்த மகன் அந்தக் குடும்பப் பொறுப்பை ஏற்றான். அவன் படித்து முடித்து நல்ல வேலையில் இருப்பதால் குடும்பம் துவளவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு அப்பாவின் டைரியைப் புரட்டிக்கொண்டிருந்தான் மகன். அந்த டைரியில் இருந்த குறிப்பு ஒன்று அவனுக்கு அதிர்ச்சி தந்தது. அதில் ஒரு நண்பரின் பெயரைக் குறிப்பிட்டிருந்த அப்பா, அவரிடம் தான் ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்கியிருப்பதாக எழுதியிருந்தார். அவர் கடன் வாங்கிய விவரம் குடும்பத்தில் யாருக்கும் தெரியவில்லை.

அப்பாவின் மரணத்தின்போதும், அதன்பிறகும் கடன் கொடுத்த அந்த அப்பாவின் நண்பர் வீட்டுக்கு வந்திருக்கிறார். குடும்ப நண்பர் என்பதால் அவர் வீட்டுக்கு அடிக்கடி வருவது வழக்கம்தான். ஆனால், வரும்போதெல்லாம் இவனிடமும் மற்றவர்களிடமும் நலம் விசாரித்துவிட்டுப் போய்விடுவார். அப்பாவுக்குக் கொடுத்திருந்த கடன் குறித்து அவர் ஒருமுறை கூடப் பேசியதில்லை.

அது அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. உடனடியாக அவர் வீடு தேடிச் சென்றான். அப்பா தன் டைரியில் எழுதி வைத்திருப்பது குறித்து அவரிடம் சொன்னான். “அங்கிள், நீங்கள் அந்தப் பணத்தை என்னிடம் கேட்டிருக்கலாமே” என்றான்.

அப்பாவின் நண்பர் நிதானமாகப் பேசினார். “உங்கள் அப்பா எனக்குப் பல நேரங்களில் பணம் கொடுத்து உதவியிருக்கிறார். நானும் அவருக்கு உதவியிருக்கிறேன். இது எங்களுக்குள் எப்போதும் உண்டு. எந்த கொடுக்கல் வாங்கலுக்கும் பத்திரம் எழுதி வைத்துக்கொள்வதெல்லாம் இல்லை.

உங்கள் அம்மா உடல்நலம் பாதிக்கப்பட்டபோது அவசரமாகப் பணம் தேவை என்று கேட்டார். கொடுத்தேன். அதற்கு எந்த ஆதாரமும் என்னிடம் இல்லை. திடீரென அவர் இறந்துவிட்டார். இந்த நிலையில், எந்த ஆதாரமும் இல்லாமல், ‘உன் அப்பா என்னிடம் கடன் வாங்கியிருக்கார்’ என்று சொல்லி, அதைத் திரும்பக் கேட்க எனக்கு மனம் வரவில்லை.

அதைவிட முக்கியமான விஷயம்... கடன் வாங்கும்போதே ‘இது வீட்டிற்குத் தெரிய வேண்டாம்’ என்று சொன்னார். அவர் இறந்து போயிருக்கலாம். ஆனாலும் அவர் வார்த்தைக்கு மதிப்பளிப்பதுதானே நியாயம். ‘வீட்டிற்குத் தெரிய வேண்டாம்’ என அவர் சொன்ன விஷயத்தை நான் எப்படி உன்னிடம் சொல்வது?” என்றார்.

மகனோ, ‘‘எந்த ஆதாரமும் இல்லாமல் போனாலும், என் அப்பா வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதுதான் அவரின் மகனுக்கு நல்ல அடையாளம்” என்று சொல்லி, கையோடு கொண்டு சென்றிருந்த

பணத்தைக் கொடுத்தான். நண்பர் நெகிழ்ந்தார்.

மனிதர்களுக்கு மதிப்பு கொடுப்பதே, நாம் நிறைவாக வாழ்கிறோம் என்பதை உணர்த்தும் விஷயம். நாம் ஒருவருக்கு உதவி செய்கிறோம் என்றால், அவர் நமக்குத் திருப்பி உதவுவார் என எதிர்பார்க்கக் கூடாது. ஒருவருக்கு அன்பைத் தருகிறோம் என்றால், அவரிடமிருந்து நமக்கும் அன்பு கிடைக்கும் என நினைக்க வேண்டாம். யாருக்கோ நாம் உதவினால், வேறு யாரோ ஒருவர் நமக்கு உதவி செய்யக்கூடும். நாம் ஒருவரை நேசித்தால், எதிர்பாராத வேறு இடத்திலிருந்து நமக்கு அன்பு கிடைக்கக்கூடும். இந்த உலகம் அப்படிப்பட்ட உறவுச்சங்கிலியால்தான் பிணைக்கப்பட்டுள்ளது.

நம் வாழ்க்கையில் சந்திக்கும் மனிதர்கள் மூன்று ரகம். சிலர், ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே நம்முடன் இருப்பார்கள். சிலர், குறிப்பிட்ட காரணத்துக்காக மட்டுமே நம்முடன் இருப்பார்கள். சிலரோ, வாழ்நாள் முழுக்க உடன் இருப்பார்கள். இதைப் புரிந்துகொண்டால் நமக்குக் குழப்பம் இருக்காது.

பள்ளி அல்லது கல்லூரிப் பருவத்தில் சிலர் நம்முடன் நெருக்கமாக இருப்பார்கள். அவர்களுடன் இருப்பதுதான் நமக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அந்தப் பருவம் முடியும்போது, ‘இவர்களைப் பிரிந்து எப்படி இருக்கப் போகிறோம்’ என்றுகூட வேதனை அடைவோம். ஆனால், காலம் செல்லச் செல்ல அவர்களை மறந்தே போவோம். புதிய மனிதர்கள் நம் நினைவுகளை ஆக்கிரமித்து இருப்பார்கள். இது எல்லோருக்கும் நிகழ்வது இயல்புதான்.

சிலர் சில காரணங்களுக்காக நம் வாழ்க்கையில் வருவார்கள். ஓர் அலுவலகத்தில் புதிதாகப் பணிக்குச் சேர்ந்ததும் பல விஷயங்களைச் செய்யத் தெரியாமல் திணறுவோம். யாரோ ஒருவர் வந்து நமக்குக் கற்றுக்கொடுப்பார். இப்படி வாழ்க்கை முழுக்கப் பல இடங்களில் பலர் கற்றுத் தருவார்கள். ‘தாங்கள் இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை’ என்றபோதும் தானாக முன்வந்து இதைச் செய்பவர்கள் உண்டு. கஷ்டத்தில் தவிக்கும்போது கைகொடுத்துத் தூக்குபவர்கள் உண்டு. துன்பங்களின்போது தோள் கொடுத்துத் தாங்குபவர்கள் உண்டு. யோசித்துப் பார்த்தால், இதை அவர்கள் செய்ய வேண்டும் என்ற கட்டாயமே இருந்திருக்காது. ஏதாவது காரணம் சொல்லித் தட்டிக் கழித்திருக்கலாம். ஆனாலும் அவர்கள் உங்களுடன் துணையாக நிற்பார்கள். யாருமே இல்லாத சூழலில், இப்படி உங்கள் பக்கம் நிற்பவர்களைக் காலம் முழுக்க மறக்காதீர்கள்.

சில நண்பர்களும் உறவுகளும் வாழ்நாள் முழுக்க உங்களுடன் இருப்பார்கள். எப்போதும் நிழல் போல இருப்பவர்களைக் கண்டுகொள்ளாமல் இருப்பதுதானே மனித இயல்பு. அப்படித்தான் பலரும் இருக்கிறார்கள். பாலைவனத்தில் பெய்யும் மழை போல நிபந்தனையற்ற அன்பு செலுத்தும், தங்கள் அக்கறையால் உங்கள் வாழ்வை முழுமை செய்யும் மனிதர்களை அலட்சியம் செய்யாதீர்கள். அவர்கள் மீது நீங்களும் அக்கறை கொண்டிருக்கிறீர்கள் என்பதை எப்போதும் உணர்த்துங்கள். ●

வெண்மை சந்தா...

மகளிர் தின சிறப்புச் சலுகை!

மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–
மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–

இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–
மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

எனவே பயன்படுத்துங்கள்!

ஓர் இளம்பெண்ணுக்குப் பிறந்தநாள் பரிசாக விலையுயர்ந்த பேனா கிடைத்தது. கல்லூரியில் அவள் வகுப்பிலேயே யாரும் அவ்வளவு மதிப்பான பேனா வைத்திருக்கவில்லை. எனவே, அதைப் பத்திரமாகப் பெட்டிக்குள் பூட்டி வைத்தாள். தினமும் பள்ளியிலிருந்து வந்ததும் அதை எடுத்துப் பார்ப்பாள். கொஞ்ச நாளில் அதன்மீது ஆர்வம் போனது. வார விடுமுறை நாட்களில் மட்டும் எடுத்துப் பார்ப்பாள். அப்புறம் அது மாதம் ஒருமுறை என்று ஆனது.

பொதுத்தேர்வு வந்தது. தேர்வை அந்த மதிப்பான பேனாவால் எழுத விரும்பினாள். பெட்டியிலிருந்து அதை எடுத்து எழுதிப் பார்த்தாள். ஆனால், நீண்ட காலம் பயன்படுத்தாமல் இருந்ததால் பேனாவில் இங்க் கெட்டியாகி அது இறுகிப் போயிருந்தது. எவ்வளவு முயன்றும் அது எழுதவே இல்லை. விலை மதிப்பான அந்தப் பேனா கடைசியில் அவளுக்குப் பயன்படவே இல்லை.

எவ்வளவு மதிப்பான பொருளாக இருந்தாலும், எவ்வளவு சிறந்த திறமை நமக்குள் இருந்தாலும், பயன்படுத்தாமல் அப்படியே விட்டால் அது வீண்தான்!

மகிழ்ச்சிக்குக் காரணமாக இருங்கள்!

அம்மா தன் பர்ஸில் திரும்பத் திரும்பப் பதற்றத்துடன் எதையோ தேடினார். "என்ன ஆச்சு? எதைத் தேடறே?" என்று அப்பா அக்கறையுடன் விசாரித்தார். "பர்ஸில் வச்சிருந்த பணத்தைக் காணோம்" என்றார் அம்மா. "எவ்வளவு?" என அப்பா மீண்டும் கேட்க, "மூவாயிரம் ரூபா, எல்லாம் 500 ரூபா நோட்டா வச்சிருந்தேன். என்ன ஆச்சுன்னு தெரியல" என்று கவலையுடன் பேசினார் அம்மா. "சரி, விடு! இங்கதான் எங்கேயாவது இருக்கும். தேடிப் பார்க்கலாம்" என்றார் அப்பா.

அம்மா கவலையுடன் கிச்சனுக்கு நகர, அப்பா எழுந்து தேட ஆரம்பித்தார். சில நிமிடங்கள் கழித்து டி.வி–க்கு அருகில் இருக்கும் ஷெல்ஃபிலிருந்து ஆறு 500 ரூபாய் நோட்டுகளை எடுத்த அப்பா, "இங்க இருக்கு பணம்" என்றார். "அடடா, நான்தான் இங்க மறந்து வச்சிட்டு பர்ஸ்ல தேடிக்கிட்டு இருந்தேன்" என்று வாங்கிக்கொண்டார் அம்மா. அவர் முகத்தில் மகிழ்ச்சி.

மாலையில் அப்பாவுடன் வெளியில் போனபோது மகன் கேட்டான், "அப்பா, நீங்களே பணத்தை அங்க வச்சிட்டு, அம்மாவோட பணம் திரும்பக் கிடைச்சிட்டதா எடுத்துக் கொடுத்தீங்களே, ஏன்?"

"டேய், நான் அந்தப் பணத்தைவிட உன் அம்மாவை அதிகம் மதிக்கறேன்.அவங்க சோகமா இருக்கக்கூடாதுன்னுதான் அப்படிச் செய்தேன்" என்றார் அப்பா.

நெருக்கமானவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணமாக மாறுவதே உண்மையான அன்பு.

விதிகள்!

- நம் பர்சனாலிட்டி என்பது மாற்ற முடியாத விதி இல்லை. நாம் நினைத்தால் அதைச் சிறப்பானதாக மாற்றலாம்.
- மனம் சொல்லும் பாதையில் செல்லுங்கள் என்று பலரும் அறிவுரை சொல்வார்கள். ஆனால், மனம் சொல்வதைக் கேளுங்கள். மூளை சொல்வதன்படி செயல்படுங்கள்.
- மோசமான பழக்கங்களுக்கு அடிமை ஆகாதீர்கள். அவை தற்காலிக இன்பம் தருபவையாக இருக்கலாம். ஆனால், அவற்றிலிருந்து விடுபடும்போதுதான் உங்கள் வாழ்க்கை சிறப்பாக மாறும்.
- சூழலையும் மற்றவர்களையும் புகார் சொல்வதை நிறுத்துங்கள். அந்தப் பிரச்னைகளை மாற்ற உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.
- 'சாரி' சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்களைக் குறைத்துக்கொண்டு 'நன்றி' சொல்லும் சந்தர்ப்பங்களை அதிகமாக்குங்கள். வாழ்வு வளமாகும்.

மறுக்கும்போது மதிப்பு கிடைக்கும்!

தூக்கமே வராமல் அவதிப்பட்டான் ஒருவன். இரவு முழுக்க புரண்டு புரண்டு படுத்துத் தவித்தான். அதிகாலை வரை ஒரு நிமிடம்கூட அவனால் தூங்க முடியவில்லை. அடுத்த நாள் முழுக்க சோர்வுடன் திரிந்தான். களைப்பில் அன்று எப்படியும் தூங்கிவிடுவோம் என நம்பினான். ஆனால், அன்றும் தூக்கம் வரவில்லை. இப்படியே ஒரு வாரம் போனது. எந்தச் சிகிச்சையும் பலன் தரவில்லை.

பயந்து போய் ஒரு துறவியிடம் ஓடினான். தன் பிரச்னையைச் சொன்னான். "இது பிரச்னை இல்லை. மகிழ்ச்சியான விஷயம்தான். உனக்கு உழைப்பதற்குக் கூடுதல் நேரம் கிடைத்திருக்கிறது. 24 மணி நேரமும் உற்சாகமாக வேலை செய்யலாமே" என்றார் துறவி. வந்தவன் குழம்பிப் போய் அவரைப் பார்த்தான்.

துறவி சிரித்தபடி அவனைப் பார்த்துவிட்டு, "சரி, எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடு. 'எவ்வளவு களைப்பாக இருந்தாலும், இரவு 11 மணி முதல் அதிகாலை 3 மணி வரை தூங்க மாட்டேன்' என்று சத்தியம் செய்து கொடு" என்றார். 'நானே தூக்கம் வரவில்லை என்று கவலையில் இருக்கிறேன். என்னை தூங்க வேண்டாம் என்கிறாரே' என்று அவன் இன்னும் குழம்பிச் சத்தியம் செய்துவிட்டுப் போனான்.

அன்று இரவு களைப்பாக இருந்தாலும் தூங்கக்கூடாது என்ற உறுதியுடன் அவன் படுத்தான். ஆனால், எவ்வளவு முயற்சி செய்தாலும் அவனால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குத் தூக்கம் வந்துவிட்டது. காலையில் உற்சாகமாக எழுந்தாலும், துறவிக்குச் செய்துகொடுத்த சத்தியத்தைக் காப்பாற்ற முடியவில்லையே என்று கவலைப்பட்டான். அடுத்தடுத்த நாட்களிலும் இப்படியே ஆனது. துறவியிடம் போய் நடந்ததைச் சொன்னான்.

"உன் நோய் தீர்க்கவே இப்படி சத்தியம் வாங்கினேன். எது ஒன்றுமே மறுக்கப்படும்போதுதான் மதிப்பு அதிகமாகும். முக்கியமாக நமக்கு ஏதாவது தேவைப்படுகிறதா? அதைத் தர மாட்டேன் என்று நினைக்கும்போது, எப்படியாவது அதை மனம் பெற்றுவிடும்" என்றார் துறவி.



அறிவே வளம்!

'என்ன படிப்பு படித்தால் வேலை கிடைக்கும்' என்று பார்ப்பது பாடம் சார்ந்த கல்வி. உலகில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்று பார்ப்பது வாழ்க்கைக் கல்வி. ஒரு காலத்தில் விவசாயம்தான் மிகப்பெரிய வாழ்வாதாரமாக இருந்தது. விவசாயம் சார்ந்த தொழில் நிறுவனங்களே அப்போது புகழ்பெற்றிருந்தன. அடுத்து தொழிற்புரட்சி வந்தது. தொழில் நிறுவனங்களே அப்போது கொழித்தன. நாம் இருக்கும் இது டிஜிட்டல் யுகம். அறிவும் தகவல்களுமே இப்போது சொத்துக்கள். கூகுள், அமேசான், மைக்ரோசாஃப்ட் என்று இவை சார்ந்த நிறுவனங்களே முன்னணியில் இருக்கின்றன. இப்போது அறியாமையே மிகப்பெரிய வறுமை. அறிவோம்... தெளிவோம்!

- நேரம் கிடைக்கும்போது மட்டும் நலம் விசாரிக்காமல், நமக்காக நேரம் ஒதுக்கி நலம் விசாரிக்கும் அன்பான உறவுகள் கிடைப்பதுகூட வரம்தான்.
- எதிலும் குறைகளைக் காண்பவர்களுக்கு ரசிக்கத் தெரியாது. ரசிக்கப் பழகியவர்களுக்கு எதிலும் குறைகளே தெரியாது.
- எதிலும் அளவோடு இருந்தால் அவதிப்படவும் தேவையில்லை. அவமானப்படவும் தேவையில்லை.
- வேலை, செயல், உழைப்பு என்று எந்த முயற்சியிலும் உடனடியாகப் பின்வாங்கிவிடாதீர்கள். ஆரம்பிக்கும் முன்பாகவே விளைவுகள் பற்றிக் கவலைப்படாதீர்கள்.
- உங்கள் தவறுகள் மட்டுமே உங்கள் அடையாளம் அல்ல. தவறுகளுக்காகக் கூச்சப்படாதீர்கள். அவற்றிலிருந்து எதையும் கற்றுக்கொள்ளாமல் இருந்தால், அதற்காக வருந்துங்கள்.
- உங்களால் ஒரு பிரச்னையைத் தீர்க்க முடியும் எனும்போது, அதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? தீர்க்க முடியாத பிரச்னை என்றால், அதற்கு கவலைப்பட்டு என்ன ஆகப் போகிறது?
- அறிவுரை தேவைப்படும்போதுதான் ஆணவம் கண்ணை மறைக்கும். கவனமாக இருங்கள்.
- எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம், என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.
- தோல்வியும் துன்பமும் தனியே வருவதில்லை. கூடவே வலிமையையும் அழைத்து வருகிறது.
- உயரங்களை எட்டுவதற்கு உதவும் நண்பரைப் பெற்றிருப்பது சிறந்தது. அதிக உயரங்களிலிருந்து விழும்போது தாங்கிப் பிடிக்கும் நண்பரைப் பெற்றிருப்பது, அதைவிடச் சிறந்தது.
- சண்டைக்குப் பின் வரும் சமாதானத்தைவிட, என்றும் சண்டையே இல்லாத சமாதானம்தான் வேண்டும்.
- சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறான் என்பதைப் பொறுத்தது.
- மனதைவாட்டும் நெருக்கடியான பிரச்னைகளின்போது, எதைப் பற்றியும் கவலைப்படாமல் தூங்கிவிடுங்கள். தூக்கத்தைவிடச் சிறந்த தீர்வு எதுவும் இல்லை.
- நீங்கள் மிகவும் ரசிக்கும் ஒரு விஷயத்தைச் செய்வதை எந்தச் சூழலிலும் நிறுத்திவிடாதீர்கள்.
- மகிழ்ச்சியாக இருக்கும்போது நீங்கள் நன்கு பிரகாசிப்பீர்கள். கோபத்தில் இருக்கும்போது எந்த முடிவும் எடுக்காதீர்கள். பயத்தால் உங்கள் நல்ல எதிர்காலத்தைக் கெடுத்துக்கொள்ளாதீர்கள்.
- உங்கள் மதிப்பை வேறு யாரோ தீர்மானிக்க அனுமதிக்காதீர்கள். அதை முடிவு செய்வது நீங்களாகவே இருக்கட்டும்.
- நீங்கள் சொல்வதை ஒருவர் புரிந்துகொள்ள மாட்டார் என நினைக்கும்போது, அதைச் சொல்லாமல் இருப்பதே நல்லது.
- உங்களுக்கு முன்பாக இருக்கும் வாய்ப்புகள் எல்லையற்றவை. வித்தியாசமாகச் சிந்தித்து, வேறு கோணத்தில் உங்களால் பார்க்க முடிந்தால் மட்டுமே அவை கிடைக்கும்.
- இழப்பிலும் தோல்வியிலும் உங்களுக்கு வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன என்று நம்புங்கள்.
- நீங்கள் உயரத்தில் இருந்தால் பொறாமைப்படுவார்கள், கீழே விழுந்தால் கேலி செய்வார்கள். இப்படித்தான் சில மனிதர்கள் இருப்பார்கள். அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், பாதையில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.
- அக்கறையான மனிதர்களுடன் நிகழும் நல்ல உரையாடல்களே மதிப்பான பொக்கிஷங்கள்.
- கடவுள் எப்போதும் கடினமான போராட்டங்களை வலிமையான மனிதர்களுக்கே கொடுப்பார். உங்கள் வலிமையை நம்பி உழையுங்கள்.

வாழ்க்கை மொழிகள்!



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL



Inners for Winners
RAMRAJ
BANIANS
BRIEFS • TRUNKS
Shreyas Iyer - Cricketer
SUKRA
Super Fine Banians
ROMEX
Supreme Banians
RISE-UP
Premium Banians
ARCHERY
Gym Vest
COMPACT
Flexible Rib Vest
ACOSTE
BANIANS | BRIEF | TRUNKS

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-03-2024. Posted at Tirupur BPC on 5th of every month.